
# யோகர் சுவாமிகளின் நற்சிந்தனைகள்



வழங்குவோர் :- சண்முகசுந்தரன் ஸ்ரீரஞ்சன்
சிவயோக சுவாமி திருவடி நிலையம்
இல 53, விவேகானந்தா வீதி
கொழும்பு 6
இலங்கை

நிதியுதவி வழங்குவோர்
சைவத்தமிழ் நிறுவனம்
அமெரிக்கா

## முன்னுரை

யாழ்ப்பாணத்தில் மாவிட்டபுரம் என்னும் கிராமத்தில் சற்குரு சிவயோக சுவாமி என்று அடியவர்களால் அன்புடன் அழைக்கப்படும் சதாசிவன் என்று பெற்றோர்களால் நாமம் சூட்டப்பட்ட புத்திரன் 1872ம் ஆண்டு மே மாதம் 29ம் திகதி அவதரித்தார். யோகநாதன் என்று பின்னர் அழைக்கப்பட்ட சதாசிவன் சிறிது காலம் கிளிநொச்சி என்ற கிராமத்தில் நீர்ப்பாசனத் திணைக்களத்தில் களஞ்சியப் பொறுப்பாளராக தொழில் பார்த்தார். அங்கு வேலை செய்த காலத்தில் சதாசிவன் தனது ஆன்மீக அறிவையும் விருத்தி செய்து கொண்டார். இரவு நேரங்களில் தியானத்தில் அமர்ந்து தன்னை உணர்வதில் ஆர்வம் காட்டினார். ஆன்மீக நாட்டம் கொண்ட யோகநாதன் பிரசித்தி பெற்ற நல்லூர் என்று அழைக்கப்பட்ட ஒரு கிராமத்தில் இருந்த முருகன் கோயிலுக்கு அடிக்கடி செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார். அவ்வாறு சென்ற ஒரு சந்தர்ப்பத்தில் தன்னைச் சீடனாக மனமுவந்து ஏற்றுக்கொண்ட தனது குருவான செல்லப்பா சுவாமியைக் காணும் பாக்கியம் அவருக்குக் கிடைத்தது. அதனை யோகர் சுவாமி பின்வருமாறு விளம்புகின்றார்.

ஆசானைக் கண்டேன் அருந்தவர் வாழ் நல்லூரில்

பேசாதன எல்லாம் பேசினான் கூசாமல் நின்றேன்

நீ யாரடா என்று அதட்டினான்

அன்றே யான் பெற்றேன் அருள்

செல்லப்பா சுவாமிகளின் சீடராக சில காலம் இருந்த யோகர் சுவாமி தனது குருவின் கட்டளைப்படி நாற்பது நாட்கள் கடுமையான தவத்தினை மேற்கொண்டதன் பின்பு கொழும்புத் துறையில் ஒரு இலுப்பை மரத்தின் கீழ் தனது துறவு வாழ்க்கையை மேற்கொண்டார். பின்பு பலரினதும் வேண்டுகோளிற்கு இணங்கி அயலில் உள்ள ஒரு சிறிய கொட்டிலில்

வசிக்கத் துவங்கினார். அவ்வாறு சுவாமிகள் கொட்டிலில் வாழ்ந்த காலத்தில் பல தரப்பட்ட மக்களும் அவரை தரிசித்து அவரது அறிவுரைகளைக் கேட்டு ஆனந்தமடைந்தனர். அவ்வாறு தன்னை தரிசிக்க வந்தவர்களுக்கு சற்குரு சிவயோக சுவாமிகள் கூறிய அறிவுரைகளே சுவாமிகள் வாழ்ந்த போது அவரால் ஸ்தாபிக்கப்பட்ட சிவதொண்டன் நிலையம் என்று அழைக்கப்படும் அமைப்பினால் ‘‘எங்கள் ஆசான் அருள் மொழிகள்’’ எனப் பெயரிடப்பட்ட ஒரு நூலில் தொகுத்து வழங்கப்பட்டது. சுவாமிகளின் அன்பர்களும் ஏனையோரும் பயன்பெற வேண்டும் என்பதே இந்த நூலின் நோக்கம். இப்பொன்மொழிகள் யாவும் சுவாமிகள் வாழ்ந்த காலத்தில் ஆன்மீக நாட்டம் கொண்டு அவரை அணுகிய அடியவர்களால் குறிப்பெடுக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டவையாகும். அவர்களில் முக்கியமான சிலர் மார்க்கண்டு சுவாமி, சந்த சுவாமி என அழைக்கப்பட்ட ஜேம்ஸ் ராம்ஸ்போதம், ஹவாய் ஆதீனத்தை ஸ்தாபித்த யோகர் சுவாமியின் பிரதம சீடரான சுப்பிரமுனிய சுவாமி மற்றும் செல்லத்துரை சுவாமி ஆகியோர்.

ஐக்கிய அமெரிக்க சைவ முன்னேற்றச் சங்கத்தால் வெளியிடப்படும் இந்த இறுவெட்டு, சற்குரு சிவயோக சுவாமிகளின் அருள்மொழிகளைப் பலரும் அறிந்து அறிவுரைகளை உள்வாங்கி தம்மை அறிந்து ஆன்மீக முன்னேற்றம் அடைய வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் வெளியிடப்படுவது அதில் ஆர்வமுள்ளவர்களுக்கு ஆனந்தமளிக்கும் என்பதில் சந்தேகமில்லை. இன்றும் சுவாமி சமாதியடைந்த ஆயிலிய நட்சத்திரத்தில் ஒவ்வொரு மாதமும் இலங்கையிலும், உலகின் பல நாடுகளிலும் அவரை நினைவு கூர்ந்து குருபூசை நடைபெறுகின்றது.

**Gnana guru Siva Yogaswami of Jaffna: Natchinthanai**

August 15, 2024

## சற்குரு சிவயோக சுவாமி நற்சிந்தனை

உலக முவக்கவும் உன் மனம் களிக்கவும்
கழறும் வாசகம் கருத்தில் இருத்துக
ஒன்றே தெய்வம் ஒன்றே உலகம்
நன்றே என்றும் நாடிப்புரிவாய்
நீ சடப்பொருள் அல்ல நிறைதரு சித்து
பேசவரிது உன் பெருமை எவராலும்
சாதி சமயம் யாவுமுனக்கில்லை
உபாதி செய்யும் புலன்வழி யுறாதே
அபாய மொன்றும் என்று முனக்கில்லை
செய்ய வேண்டிய செவ்வனே செய்வாய்

***

பஞ்சப் புலன்வழி போம் மனத்தினை வெல்லு
பஞ்சாட்சரத்தை அனுதினம் சொல்லு
கொஞ்சம் கொஞ்சமாக சினத்தினை கொல்லு
குற்றம் யாவையும் குணமாகக் கொள்ளு
பொன்னாசை மண் ஆசை போக்கு
போக்கும் வரவுமற்ற பொன்னடியை நோக்கு

***

அனைவருக்கும் தெய்வம் ஒன்றே
அதை அறிந்து வாழ்வதுவும் நன்றே
முனைத்து நிற்கும் காமக்குரோதம் போக்கு
பின்பு மூவரையும் தேவரையும் ஏவலாக்கு
வினைப்பகையை வெல்வதற்கு மார்க்கம்
குருவே தந்த திருவாக்கு
நினைத்தபடி நீணிலத்தில் வாழ்வோம்
நாம் நித்தியரென்பதை நாளும் மறவோம்.

***

தீவினை செய்வார் தம்மையும் இகழார் மெய்யடியார்கள்
ஐம்பொறி வழி போய் அவனியில் அலையார் மெய்யடியார்கள்
ஆணவம் தன்னை அழித்திடுவார்கள் மெய்யடியார்கள்
ஆசைவழி போய் மோசம் போகார் மெய்யடியர்கள்
வந்தது போனது மனத்தே வையார் மெய்யடியார்கள்
வாணள் ஆசை பேணாதிருப்பார் மெய்யடியார்கள்
போவதும் வருவதும் இல்லையென்பார் மெய்யடியார்கள்
புலன்வழி செல்லும் மனத்தை வெல்வார் மெய்யடியார்கள்

***

ஆவதும் ஒன்றுமில்லை அழிவதும் ஒன்றுமில்லை
நோவதேன் பிறர் தம் மாட்டு நூதனம் ஒன்றுமில்லை
தேவனை வேண்டி நின்றால் சீவனே சிவனாய் தோன்றும்
பூவலம் தன்னில் மீண்டும் பிறப்பரோ புகலுவாயே

புகல்வதற்கொன்றும் இல்லை புண்ணிய பாவமும் இல்லை
இகல் செய்யும் மனத்தை வென்றே ஈசனை வேண்டி நின்றால்
நிகருனக்கு யாருமில்லை நீயிதை அறிந்து மண்ணில்
இகலுடன் வாழுவாயே இது திடம் அறிகுவாயே

அறிகுதி அறிவினாலே அறிகுதி தன்னை என்றான்
பிறிவற நின்று பார்த்தால் பிரம்மமே நீயும் நானும்
குறி குணமொன்று மின்று கூடுதல் பிரித லின்று
செறிதரு முயிர்களென்று செப்புதற் கொன்று மின்றே

***

சும்மா இருக்க முடியாதலால் தான் பாடலும் படிப்பும் நடைபெறுகின்றன. கடவுள் எங்களுடனே எப்போதும் இருக்கின்றார். ஆனால் காசிக்கும் கைலாயத்திற்கும் போவென்றும் அலைக்களிக்கின்றார்.
களவு எடுத்தவனும் பரிசுத்தப்படுகின்றான். களவு கொடுத்தவனும் பரிசுத்தப்படுகின்றான். எங்கள் சிற்றறிவிற்கு அது விளங்காது.
நீயே நற்சிந்தனை. ஆகையால் நீ பரிசுத்தப்பட வேண்டும். தன்னைத் தன்னால் அறிய வேண்டும்.
அந்தக்கரணங்களில் நோய் பீடிக்காவண்ணம் கவனமாக இரு. விழித்திரு. எச்சரிக்கையாக இரு.
தன்னையறிய வேண்டும். தன்னைத் தன்னால் அறிய வேண்டும். அதற்கு மன ஒடுக்கம் வேண்டும். சிவத் தியானம் செய்ய வேண்டும்.

***

காசை அதிமாக வைத்திருந்து என்ன செய்யப் போகின்றீர்கள்?

சீவியத்தை ஒரு நாளாவது கூட்ட முடியுமா? உள்ளபோது இயலுமான வரை தான தருமங்களைச் செய்யுங்கள்.

எங்களது ஆசைகளுக்கு ஒரு எல்லையுண்டா? சிறு உத்தியோகம் இருக்கும்போது பெரும் உத்தியோகத்திற்கு ஆசை. அதன்பின் பெரும் சம்பளத்திற்கு ஆசை.

பிள்ளைகள் நல்லாய் வரவேண்டும் என்று ஆசை. இந்த ஆசைகள் இருக்கும் வரை விடுதலை எப்படிக் கிடைக்கும்?

மற்றவர்களை ஏமாற்றலாம். தன்னை ஏமாற்ற முடியாது. மனச் சாட்சியின் படி நடந்துகொண்டு போக எல்லாம் வலிய வரும்.

இயேசுநாதர் கூட "எனக்காக வேண்டிப் பாடுபட வேண்டாம். உங்களுக்காகப் பாடுபடுங்கள். உங்களைத் திருத்தாமல் எனக்குத் தொண்டு செய்வதில் என்ன பிரயோசனம்" என்று கூறியிருக்கின்றார்.

***

துள்ளும் மனத்தை என்றும் வெல்லு
சும்மா இருக்கும் நிலை நில்லு
சொல்லும் பொருளுமற்றுச் சும்மா இருக்க வேண்டும்
தூயகுருவின் பாதம் துணையாகக் கொள்ள வேண்டும்
சொல்லாலே பயனில்லைத் தம்பி
சும்மா இருந்து பார் தம்பி
மானாபிமானம் விட்டு மண்ணும் விண்ணும் தெரியாமல்
தானான தன் நிலையில் சின்னத்தங்கம் தனியே இருந்திடடி.

***

ஒரு பொல்லாப்பும் இல்லையென்ற ஒரு மொழியால் உள்ளம் உருகாதோ

எப்பவோ முடிந்ததென்றான் எங்கள் குருநாதன்

நாமறியோம் என்று முன்னாள் நல்லூரில் சொன்னான்

ஆரறிவான் என்று முன்னாள் ஆசான் உரைத்தான்

அப்படியே உள்ளதென அன்று ஆசான் சொன்னான்

பஞ்சப் புலன்வழி போய் பாரில் அலையாதே

சிந்தித்துச் சிந்தித்து சிவனே நாம் என்று நீயும் நம்பு

ஐயப் படாமல் அருள் வழியே செல்லு

***

சஞ்சலம் வராமல் இவ்வுலகில் வாழ முடியுமா?

இவ்வுலகிற் பிறப்பதையே பிணியாகச் சொல்லப்பட்டிருக்கின்ற போது சஞ்சலத்தைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமா?

சஞ்சலங்கள் வந்து கொண்டுதான் இருக்கும்.

ஆனால் அதனால் பாதிக்கப் படாமல் இருக்கவும் வழி காட்டப்பட்டிருக்கின்றது.

சற்குருவின் கடாட்சத்தாலும் மெய்யறிவைப் பெறுவதாலும் அந்த வழியை அறிந்து ஒழுகுவோமாகில் சஞ்சலங்களை நாம் தவிர்க்கலாம்.

***

அநித்திய வஸ்துகள் ஒன்றும் பூரண இன்பத்தைக் கொடுப்பதாயில்லை. அவற்றில் கிடைக்கும் சுகம் சிற்றின்பமாகவே முடிகின்றது.

சிற்றின்பம் நிலையில்லாத இன்பம். முடிவில் துன்பம்.
அந்த இன்பம் நம்மை பந்தப்படுத்துவது.
உலக வாழ்வின் சஞ்சலங்களைக் கண்ட விவேகி அச்சஞ்சலங்களுக்கு காரணமான புலன் இன்பங்களை ஒரு நாளும் நாடமாட்டான்.
அவற்றிலிருந்து விலகியே இருப்பான். அதுவே விடுதலைக்கு வழி.
ஆத்மா ஒன்றே நித்திய வஸ்து. நான் என்பதும் அதுவே.
நமக்கு வழி காட்டுவதும் அதுவே.

***

இவ்வுலகத்திலே யாவும் அநித்தியம்.
இத்தேகம் அநித்தியம், பஞ்ச பூதங்கள் அநித்தியம், ஐம்பொறி ஐம்புலன்களும் அநித்தியம், பெண்டிர் பிள்ளைகள் அநித்தியம், அதிகாரம் செல்வம் அநித்தியம்.
ஆகையால் இவைகளில் மயங்கிப் பற்றுவைப்பது சஞ்சலத்திற் கிடமாகும்.
இவை நாமல்ல, இவை நமக்கு அந்நியமானவை. நமக்கு வேண்டியவையுமல்ல, நம்மை விட்டு நீங்காதவையுமல்ல.
ஆகையால் மனத்தை இந்த விடயங்களில் இலயிக்க விடுவது சஞ்சலத்தையே வரவழைக்கும்.
யாக்கையே நிலையில்லாத போது யாக்கையுடன் சம்பந்தப்பட்ட விடயங்களில் பற்று வைப்பதில் என்ன பயன்?

***

வேலைக்காக வேலையைச் செய். அன்புக்காக அன்பு செய்.

நல்லோர் அல்லோர் ஆகிய பல விதமான யாத்திரீகர்களும் இவ்வுலகமாகிய பெருங் கோயிலுக்கு வருகின்றார்கள்.
அவ்வாறு வருவோரின் குற்றம் குறைகளைக் கருதாது இறைவனை வணங்குவதிலேயே நாம் ஒருமை மனமுடையவராக இருப்போம்.

உண்மையில் ஒன்றும் நடக்கவில்லை. நீயும் பிறக்கவில்லை நானும் பிறக்கவில்லை.
இது ஒரு கனவேயாகும். கனவும் அதைக் காணும் அவ்வளவு நேரத்திற்கும் உண்மையாகும்.
நாங்கள் இதனைச் செய்தோம், அதனைச் சாதித்தோம் என்று எண்ணி மகிழாதீர்.
யாவும் தாமாகவே நடைபெறுகின்றன, உங்களது முயற்சியால் அன்று. நீ இறைவனின் ஒரு கருவியேயாவாய்.

***

உலகத்தையோ மற்றவர்களையோ திருத்த உன்னால் முடியாது.
நீ உன்னைத் திருத்திக் கொள். ஒவ்வொருவரும் தன்னைத் தான் திருத்திக் கொண்டால் உலகம் திருந்தும்.
பாவ புண்ணியங்களுக்கு நீயே காரணகர்த்தா இறைவன் அல்ல.

உலகம் ஆசை வயத்தது. உலகில் நிகழும் இன்ப துன்பங்களை உண்மையென நம்பி வாழ்பவர்கள் நீங்கள்.
அவற்றையும் இவ்வுடலையும் மெய்யெனக் கருதாது வாழ்பவன் நான்.
இதுவே எனக்கும் உங்களுக்கும் உள்ள வேற்றுமையாகும்.

அவரவர் செய்த பழைய வினைக்குத் தகவே யாவர்க்கும் யாவும் சரியாக அளந்தளிக்கப்பட்டுள்ளன.

இந்த நியதி மாற்ற முடியாதது. இதனை நன்கு உணர்ந்து கொண்டு ஒருவன் பொருந்திய வண்ணம் வாழ வேண்டும்.

ஒருவருக்குத் தேவையானவை யாவும் அவர் பிறப்பதற்கு முன்பே உலகில் படைக்கப்பட்டுள்ளன.

***

நீ ஒன்றும் பேச வேண்டியதில்லை மௌனமாக இரு.

நீ ஒன்றும் செய்ய வேண்டியதில்லை சும்மா இரு.

எல்லாம் தானாகவே நடக்கும். நீ உன்னை ஒப்புக் கொடுத்துவிட்டால் போதும்.

மனத்தைக் கட்டுப்படுத்துவதால் வல்லமைகளைப் பெறலாம், ஆனால் உனக்கு அவை அவசியமற்றவை.

உன்னை நீ நாள் தோறும் சோதித்துக் கொள். அதுவே முதற் படி.

எல்லாம் ஆத்ம இயக்கமே. நீ அதனை உணர வேண்டும். உனக்கு அது விளங்கிவிட்டால் நீ விரும்பிய படி வாழலாம்.

பாசாங்கு செய்தல் மிகச் சுலபம் ஆனால் அதை நீ செய்யாதே.

ஆன்மாவே நீ என்று அறியும் அறிவை அருளும்படி இறைவனிடம் வேண்டிக்கொள்.

மனத்தை எண்ணங்களில் சிதற விடாமல் அடக்கிப் பழகி வர, மனம் ஆத்மாவில் ஒடுங்கிவிடும்.

***

போவதும் வருவதும் போலவே இறப்பும் பிறப்பும். சுக துக்கங்கள் வெளித் தோற்றங்களே.

அயலவனுடைய மனம் நோகாமல் நாங்கள் நடந்து கொள்ள வேண்டும். உண்மை என்னவென்றால் நீயுமில்லை நானுமில்லை. கடவுள்தான் எங்கும் இருக்கின்றார்.

நாங்கள் கடவுளைப் பார்க்க முடியாவிட்டாலும் கடவுள் எங்களோடிருந்து எல்லாவற்றையும் பார்க்கின்றார்.

எல்லாவற்றையும் பார்த்தோம் ஆனால் பார்க்கின்ற பொருளை நாம் பார்த்ததில்லை.

அப்பொருளும் ஒன்றையும் பார்ப்பதில்லை. பார்க்கிறது போல இருப்பதுதான் மாயை.

***

மனம் ஒரு நாளும் இறப்பதில்லை ஆனால் ஆத்மாவில் ஒடுங்குகின்றது.

பிறரை ஏமாற்றுகின்றவன் தன்னையே ஏமாற்றுகின்றான்.

ஒருவனிடத்தில் ஒழுங்கு, அறிவு, சேவையுணர்ச்சி ஆகியவை இருந்தால் திருவருள் நிற்கும்.

தன்னைத் தன்னாலறிந்து தானே தானாயிரு. இதுவே திருவடி. இதுவே வீடு.

இறைவன் வேறு, குரு வேறு, நீ வேறு, ஆத்மா வேறு என்பது அறியாமை. இறைவனும் குருவும் நீயும் ஒன்றே என்பதை அறிவதே ஞானம்.

***

எப்போதும் வெளிச்சத்தோடு செல். ஆத்மாவின் ஒளி உனக்கு வழி காட்டும்.

நம்பிக்கை குறைவு, ஐயம், உலகப்பற்று ஆகிய காற்றுக்கள் உனது உள்ள விளக்கை அணைக்காது பார்த்துக்கொள்.

புத்தகப்படிப்பால் ஆவதொன்றும் இல்லை. தன்னைத் தன்னால் அறிய ஆத்மதரிசனம் உண்டாகும்.

பார்ப்பதெல்லாம் சிவமாகப் பார். செய்வதெல்லாம் சிவத்தொண்டாகச் செய்.

நான் எனது என்பதனை விட்டு விடு. சர்வம் பிரம்ம மயம் என்றறிந்த ஞானி சித்திகளைப் பற்றிச் சிந்திப்பதில்லை.

***

இழப்பதும் இல்லை ஆதாயம் ஆக்கிக் கொள்வதும் இல்லை என்ற உண்மையை உணர்ந்தபின் மனிதன் வரும் துன்பங்களை துணிச்சலுடன் தாங்கிக்கொள்ள வேண்டும்.

உனது உயர்வான ஆன்மாவே உன்னை வழி நடத்துகின்றது. நீ அதனை உணர்ந்து கொள்ள வேண்டும்.

உன்னை நீ விளங்கிக் கொள்ளும் வரை நீ மிகவும் கவனமாக இருத்தல் வேண்டும்.

விளங்கிக் கொண்ட பின் எங்கும் எப்படியும் இருக்கலாம். விரும்பியதைச் செய்யலாம்.

ஒரு கருமத்தைச் செய்வதற்கு தீர்மானிப்பதற்கு முன் நன்றாகச் சிந்தி.

உனது உள் உணர்வுக்கு செவிமடு.

நீ உன் வழியே செல். உனது மனச் சாட்சியைப் பின்பற்று. ஒரு பொல்லாப்பும் இல்லை.

உன்னை நீ எங்கும் காண். நீயே உலகம். நீயே தெய்வம். நீ அதனை அறியாய்.

கடவுளை உன்னுள் உணர். அப்போது எல்லாம் உன் ஆணையின் கீழ்.

***

ஆசை பேராபத்து. நீ ஆத்மா. எதிலும் ஆசை வைக்காதே.

உலகம் மிகவும் அழகானதும், தூய்மையானதும் ஆகும்.

அந்த உலகம் உனக்குள்ளேயே இருக்கின்றது.

சும்மாயிரு. எதையும் சிந்திக்காதே. எண்ணங்கள் வந்து போகட்டும். அவற்றில் இலயிக்காதே.

சிலர் என்னை சுவாமி என்கிறார்கள். ஆனால் நான் உங்களைப் போலவே.

என்னுள் இருக்கும் கடவுள் தான் உங்களுக்குள்ளும் இருக்கின்றார். எல்லோரும் ஒரு மாதிரியே.

இதை உங்களுக்குக் கூறினால் ஆம், ஆம் என்பீர்கள். ஆனால் உங்களுக்கு விளங்குவதில்லை.

உங்களுக்கு விளங்காவிட்டாலும் நீங்கள் எல்லோரும் தெய்வங்களே.

ஆதியும் இல்லை அந்தமும் இல்லை. அதுவே நீ.

நீ கடவுளைக் காண முடியாது ஏனெனில் அதுவே நீ.

ஆசையிலிருந்தே எல்லாம் எழுகின்றன. ஆசை இல்லாத போதே ஆனந்தம்.

***

மனத்தை எண்ணங்களில் சிதற விடாமல் அடக்கிவர மனம் ஆத்மாவில் ஒடுங்கிவிடும்.

அந்த நிலையில் வரும் எண்ணங்கள் ஆத்ம சக்தியிலிருந்து வெளிப்படும்.

மழை வேண்டும் என்ற எண்ணம் வருமாகில் மழை வரும். இதையே ஆத்ம சக்தி என்பார்கள்.

பெரியோர்களைக் காண்பது ஒரு ஒழுங்கு. ஆனால் கடவுளைத் தேடி இந்தியாவிற்குப் போகத் தேவையில்லை.

கடவுள் எங்களுடன் எப்பவும் இருக்கின்றார். அவரைத் தேடி எங்கும் போகத் தேவையில்லை.

கடவுள் உனக்குள்ளே இருக்கின்ற படியால்தான் நீ கடவுளைத் தியானம் பண்ணக் கூடியதாக இருக்கின்றது.

மற்றவருடன் பகையும் கூடாது சினேகமும் கூடாது. நீ மற்றவருடன் பேசும் பொழுது நீ உன்னுடன் பேசுவது போலவே பேச வேண்டும். நாம் எல்லோரும் ஒருவரே.

உன்னுடைய வாழ்க்கையை நினைத்துப்பார். எதை இழந்தாய் எதை ஆதாயமாக்கினாய்? என்ன சுகத்தைக் கண்டாய்? பெரியோர் வாழ்வினை கனவு, கானல்நீர் என்று வருணித்தது எவ்வளவு உண்மை.

***

உன்னை உன்னால் அறி. அதுதான் புத்த மதத்தின் போதனை.

இழப்பதும் ஒன்றுமில்லை, ஆதாயாமாக்கிக் கொள்வதும் ஒன்றுமில்லை. அதுவே எல்லாமாய் எங்குமாய் இருக்கும் போது நாங்கள் எப்படி நட்டம்

நயத்தைப் பற்றிப் பேச முடியும்? வருவதும் போவதுமில்லை கடந்த காலம் எதிர் காலமும் இல்லை.
உலகம் முழுவதும் ஒரு மனிதனே உளன். கடவுளும் ஒருவனே. நீயே எங்கும் இருக்கின்றாய். கடவுளும் எங்கும் இருக்கின்றார்.
நாங்கள் சமுத்திரத்தில் அலைகள் போலவே. சமுத்திரமும் அலைகளும் ஒன்றே.
ஆத்மா ஒன்றே உருவங்களே பல.

***

உண்மையைச் சொல். தவத்தை மறக்காதே. சும்மா இரு. ஆனால் உனது தொழிலைச் செய்.
உலகத்தில் எல்லாம் நன்றாகவே நடைபெறுகின்றன. ஒரு பொல்லாப்பும் இல்லை.
உண்மையான சன்னியாசி உனக்குள்ளே தான் இருக்கின்றான். வெளி வேடத்தில் ஒன்றுமில்லை.
நீ ஒருவனைக் கெட்ட மனிதனென்றோ நல்ல மனிதனென்றோ கூறாதே. எல்லோரும் மனிதர்கள் தான். கெட்ட மனிதனோ நல்ல மனிதனோ இல்லை.
நீங்கள் எல்லோரும் தெய்வங்களே. உங்களுக்கு அது விளங்காது. நீங்கள் முதலில் உங்களை விளங்கிக் கொண்டால் கடவுளை விளங்கிக் கொள்ள முடியும்.
வாழ்வின் குறிக்கோளை உணராத மாந்தர்கள் வெளி ஆடம்பரங்களில் காலத்தை வீணாக்குகின்றார்கள். குறிக்கோளை அறிந்தவர் அதனை அடைந்து இன்பம் துய்ப்பர். உனது விடுதலைப் பாதை நீண்டதாகும். அதனை உணர்ந்து நடந்துகொள்.

நீ சும்மா இரு. பகைத்தலும் வேண்டாம். நட்பும் வேண்டாம். அவைகளும் வேலைகளே.

***

உன்னை ஒருவன் புகழலாம் அல்லது இகழலாம். நீ ஆத்மா. உனக்கு அதனால் ஒரு பாதிப்பும் இல்லை.
நீ என்றும் சாட்சியாக இரு. நீ உண்மையை அறியவே விரும்புகின்றாய். உனக்கு வல்லமைகளோ, சித்திகளோ தேவையில்லை.
தேகத்திற்கும் மனத்திற்கும் நீயே தலைவன். ஆனால் நீ அவைகளல்ல.
நீ இலக்கை அடைவதற்கு பல வழிகள் உண்டு. ஒவ்வொரு சமயமும் ஒவ்வொரு வழியைக் காட்டுகின்றன. நீ உன்னுடைய சொந்த வழியிலே செல்.

உலகம் அழகானதும் தூய்மையானதும் ஆகும்.
உலகம் புனிதமும் இரகசியமானதும் ஆகும்.
அந்த முழு உலகமும் உனக்குள்ளே உள்ளது. உண்மையை உணர். முழுவதும் உண்மை. உண்மை எங்கும் உள்ளது. அதை நீ எங்கிருந்தும் காணலாம்.
உனக்குள்ளே தான் உண்மை இருக்கின்றது.
எல்லாம் இரகசியமும் புனிதமும் ஆனது. நீயும் அதுவே. ஆதியும் இல்லை அந்தமும் இல்லை.

***

அங்குமிங்கும் மனத்தை அலைய விடாதே. மனம் இறந்தவுடன் நீ அதுவாகின்றாய்.

உனக்குள்ளே பெலத்துக் கொள். பளிங்கு போலப் பிரகாசி.

சுவாமி உன்னுள் இருக்கின்றார் என்பதை நீ நம்பு. நீ அவரைத் தேடி அங்கும் இங்கும் அலைய வேண்டியதில்லை.

மற்றவர்களுக்கு உதவ வேண்டுமென்று விரும்பினால், இறைவனை நோக்கிப் பிரார்த்தனை செய். உன்னால் வேறு என்ன செய்ய முடியும்? எல்லாம் அவன் செயல் என்பதே உத்தமமான உண்மை. ஒரு நூதனமும் இல்லை.

உனக்குள்ளே இருக்கும் அது சொல்லுகின்ற வண்ணம் வேலையைச் செய். ஆனால் பற்றில்லாமல் செய்.

உனது மனச்சாட்சியை திருப்திப்படுத்த வேலை செய்.

ஆசையே அச்சத்துக்குக் காரணம். அச்சமே சினத்திற்குக் காரணம். ஆகவே ஆசையைத் தவிர்க்க வேண்டும்.

மனம், வாக்கு, காயத்தில் ஒழுக்கம் தவறாதிருத்தலே பிரம்மச்சரியம்.

ஒருவனிடத்தில் ஒழுக்கம் இருந்தால் திருவருள் நிற்கும். நல்லறிவு இருந்தால் திருவருள் நிற்கும். சேவையுணர்ச்சி இருந்தால் திருவருள் நிற்கும்.

வெளிப்பார்வைக்கு உலகத்தவர் போல நீ வாழ்ந்தாலும் அகத்தில் அசைவற்றிருப்பாயாக.

***

ஏகன் அனேகன். ஏகனும் அவனே அனேகனும் அவனே.

ஒரே தெய்வம். நாம ரூபங்கள் பல. சமயங்களும் அவ்வாறே. ஒரே ஒரு பிரம்மம், ஆத்மாவாக பலகோடி நாம ரூபங்களில் பரிணமிக்கின்றது.
நீ உருவத்தைப் பார்க்கும்போது, உண்மையில் உன்னுள் இருக்கும் அது தான் பார்க்கின்றது.
உருவத்திற்குச் சோடனை செய்த பின் "சுவாமி நல்ல அழகாய் இருக்கின்றார். நல்ல கலையாய் இருக்கின்றார்" என்கின்றாய்.
இவையெல்லாம் உன்னுள்ளே இருக்கும் கடவுளே செய்கின்றார் என்பதை நீ அறிந்தாய் இல்லை.

***

வணங்குவதும் வணங்கப்படுவதும் ஒரே பொருள் தான்.
தன்னை அறியாதவிடத்துத்தான் புத்தகங்களைப் பார்க்கின்றோம். தன்னை அறிந்தால் தவம் வேறில்லை.
உண்மை ஒன்று உள்ளது. அதைக் கண்டோம் என்றோ, காணவில்லை என்றோ கூற முடியாது.
இந்த உடம்பை எடுத்த அன்றே பிராரத்தப்படி எல்லாம் நியதியாயிற்று. நோய்கள் கூட அப்படியே.
ஆகவே நோய் ஏன் வந்தது, எப்படி வந்தது என்று யோசிக்க வேண்டிய தேவை இல்லை.
எங்களால் ஆவது ஒன்றுமில்லை. எல்லாம் எப்பவோ முடிந்த காரியங்கள்.

***

இந்த உலகம் மிக நல்லது. ஒரு குறையுமில்லை.
உடம்பென்று நாங்கள் நம்பும் வரை பிறக்கத்தான் வேண்டும்.

உள்ளம் சுத்தமாயிருந்தால் ஒன்றுக்கும் பயப்படத் தேவையில்லை. தெய்வங்களாக வாழலாம்.

ஒவ்வொருவரும் அன்றன்று செய்ய வேண்டியவைகளைக் கிரமமாகச் செய்ய வேண்டும்.

நாளைக்கு என்ன நடக்குமென்று எங்களுக்குத் தெரியாது. அதைப்பற்றி ஏன் கவலைப்படுவான்.

மனத்தில் கலக்கமில்லாமல், களங்கமில்லாமல் ஒழுங்காக வாழ்ந்தால் உங்களுக்கு ஒரு குறையுமில்லை.

நீங்கள் எப்போது என்ன செய்ய வேண்டுமென்பதை உங்களுக்குள்ளே இருக்கும் கடவுள் சொல்லித்தருவார்.

அவருக்குத் தெரியாமல் யார் என்ன செய்ய முடியும்.

***

வேறொருவர் சொல்வதை செவிக்கு எடுக்காதே. உன்னையே கேள். உனக்குள்ளே கடவுள் இருக்கின்றார். அவர் உன்னுடன் பேசுவார். உன்னிலேயே நீ நில்.

எல்லோரும் உனது நண்பர்களே, எல்லோரும் உனது பகைவர்களே. மக்களை வேறுபடுத்தாதே. உன்னைப் போலவே யாவரையும் பார்.

உனக்குள் இருக்கும் தெய்வம் தான் மற்றவர்களுக்குள்ளும் இருக்கின்றது. எங்கும் எல்லோரிலும் கடவுளைக் கண்டு ஆனந்தத்தைக் காண்.

நீ பிரசங்கங்களுக்குப் போகவேண்டிய தேவையில்லை. நீ யாவையும் அறிவாய். எல்லாம் உனக்குள்ளே இருக்கின்றது.

***

கயிற்றரவு நியாயமே எல்லாம். ஒன்றாயிருப்பதைப் பலவாய் காண்கின்றோம்.
எல்லாம் உனக்குள்ளே. உண்மையை அறியத் தொழுகை வேண்டும்.
அதுவன்றி சும்மா கிழிக்கும் கிழங்கிற்கு ஆப்பும் சுத்தியலும் எடுத்த மாதிரித்தான் நூல்களும் அவற்றிற்கு விளக்கவுரைகளும்.
உலகில் குருவும் இல்லை சீடனும் இல்லை. உன்னை நீ வழி நடத்தவேண்டும். எல்லோருள்ளும் உள்ள கடவுளே உன்னுள்ளும் இருக்கின்றார்.

***

நாம் அறியோம் என அறிவதே முடிந்த முடிவு. எல்லாவற்றையும் கடந்து உன்னை உணர்ந்த பின் நீ அந்நிலைக்கு வருவாய். தன்னை அறிதலே அறிவு. மற்றெல்லாம் பேயறிவு.
உன்னை எங்கும் காண். அது அறிவு. நீ அறிவதற்கு ஒன்றும் இல்லை. எல்லாம் உனக்குள்ளே. அதை நீ அறிய வேண்டும்.
பாசமென்ற கயிற்றை விட்டு விடு. எல்லாவற்றையும் பார். சாட்சியாக மாத்திரம் இரு. ஈடுபடாதே.
எல்லாம் கனவு. எல்லோரும் கனவு காண்கின்றார்கள் விழித்துக் கொள்ளும் வரை.

***

பிறருக்குக் கொடு, பிறருக்கு உதவி செய். ஆனால், பற்றின்றி பிரதியுபகாரம் எதிர்பார்க்காமல் செய். கொடுப்பதையும் அவதானத்தோடு கொடு.

நீ விளங்கிக் கொள்ள வேண்டும், அதுவரை அவதானத்தோடு ஒவ்வொரு அடியையும் எடுத்து வைக்க வேண்டும்.

உன்னை நீ நாள் தோறும் சோதித்துக்கொள்ள வேண்டும். அதுவே முதற்படி.

உனக்கு விளங்கிவிட்டால், நீ விரும்பியதைச் செய்யலாம். ஆடலாம், பாடலாம்.

எல்லாம் ஆன்ம இயக்கமே. ஒவ்வொரு அசைவும், ஒவ்வொரு மாற்றமும் ஆன்ம இயக்கமே.

சலனமற்ற தடாகத்தைப் போல மனம் பூரண அமைதியாயிருத்தல் வேண்டும். அப்போது விளங்கிக் கொள்ளலாம்.

***

மனிதன் தன்னை உணர்ந்தால், தான் ஆத்மாவே என்பதை அறிந்தால், முற்பிறவி, பிற்பிறவி யாவற்றையும் அறிந்து கொள்ளலாம்.

ஆசையை அகற்றிப் பிறவியை இல்லாமலும் செய்யலாம். நான் என் தொண்டைச் செய்கின்றேன் நீ உன் தொண்டைச் செய்.

தியானம் செய்தால் அதுவும் வேலை தான். பத்து நிமிடத்திற்கென்றாலும் சும்மா இருக்கப் பழகு.

***

மூச்சை அடக்கிப் பிராணாயாமம் செய்யத் தேவையில்லை. ஒழுங்காக சிவத்தியானம் செய்து வந்தால் மனவடக்கம் இலகுவாக வரும்.

ஒன்றையே பலர் பல விதமாகச் சொல்லி இருக்கின்றார்கள். பலதையும் படிக்கப் படிக்க மனம் விரிவடையும் ஒடுங்காது. ஒடுங்கின மனம் தான் ஆறுதலைத்தரும்.

மனிதன் காண்பவைகளை, சாட்சியாய் இருந்து பார்த்து மகிழாமல், யான் எனது என்ற ஆணவம் பிடித்து அலைகின்றான்.

***

தவமென்றால் சோம்பல் தனமல்ல. சும்மா இரு என்பதுவும் சோம்பல் தனமல்ல.

சும்மா இருக்கப் பழக வேண்டும். மனத்தைத் தடுக்கத் தேவையில்லை. தடுத்தால் அது வேகங் கொள்ளும். மனம் எங்கே போகின்றது என்று அறிந்து கொண்டு, இருக்கும் இடத்திலேயே இருக்க வேண்டும்.

தன்னைத் தன்னால் அறிவதற்கு மன ஒடுக்கம் தேவை.

சும்மா இருக்கின்ற சூட்சுமம் நீ. சும்மா இருக்கின்ற சூட்சுமம் நான். சும்மா இருக்கின்ற சூட்சுமமே எல்லாம்.

சும்மா இருந்தால் தன்னை அறியலாம். தன்னை அறிந்தால் புறத்தியில்லை. எல்லோரும் ஒன்றே என்ற அறிவு உதயமாகும்.

சும்மா இருக்க முடியாதபடியினாற் தான் பாடலும் படிப்பும் நடைபெறுகின்றன.

***

நான் உங்களுடன் கதைக்கும் போது தெய்வங்களுடன் தான் பேசிக் கொண்டிருக்கின்றேன்.

உங்களுக்குள் கடவுள் இருந்து சரியான பாதையைக் காட்டுகின்றார்.

மனிதனைத் தெய்வம் என்றால் அது மிகைப்படக் கூறுவதல்ல. அதுதான் உண்மை.

தெய்வம் எங்களுடன் இருக்கிறபடியால் தானே நாங்கள் பார்க்கிறோம், கேட்கிறோம், பேசுகிறோம்.

மனத்தை அடக்க முயற்சிப்பதும் ஒரு நினைவுதான். மனத்தை ஆத்மாவில் இலயிக்கச் செய்துவிட்டால் அதன் பின் நினைவுகள் அதன் தொழிலாக மாட்டா.

பாதையோ நீளமானது. முள்ளும் கல்லும் நிறைந்தது. கவனமாக மெள்ள மெள்ளத்தான் போக வேணும். நல்லபாதை இருக்க முள்ளுக்குள் போகக் கூடாது.

தூண்டிற்காரன் தன்னுடைய இலட்சியத்தில் கவனமாக இருப்பதைப் போல நாங்கள் எங்கள் இலக்கை அடைவதில் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும்.

***

தன்னைத் தன்னால் அறியும் வரை எதிலும் திருப்தி ஏற்படாது. மனம் எதையாவது விரும்பிக் கொண்டே இருக்கும்.

மனத்தின் சுபாவம் அப்படி. சும்மா இருக்காமல் அங்கிங்கெல்லாம் ஓடித்திரியும். நமக்கென்ன.

மனம், வாக்கு, காயத்தில் ஒழுங்காய் நடந்தால் மனம் ஆத்மாவோடு சேர்ந்து விடும். ஒழுக்கம் தவறினால் மனம் தீங்கு செய்யத் தூண்டும். ஒருவன் தன் பிள்ளைகளை வளர்ப்பது போல் எங்கள் மனத்தை நன்கு பழக்கவேண்டும். மனமே எங்களுக்கு நண்பனும் பகைவனுமாவான்.

மனத்தை அடக்குவதற்கு இக்காலத்தில் இலேசான வழி சிவத்தியானம் செய்வதே.

சிவத்தியானம் செய் செய் செய்
சிவமே நாமெனல் மெய் மெய் மெய்
அவணியனைத்தும் பொய் பொய் பொய்

அதனை அறிந்து நீ உய் உய் உய்.

***

அவரவர் செய்த பழைய வினைக்குத் தகவே யாவர்க்கும் யாவும் சரியாக அளந்தளிக்கப்பட்டுள்ளன. இந்த நியதியை யாரும் மாற்ற முடியாது.
இதனை நன்கு உணர்ந்து கொண்டு ஒருவன் தனக்குப் பொருந்திய வண்ணம் வாழக்கடவன்.
அப்பொழுதுதான் அவன் மகிழ்சியாக வாழலாம்.
அப்படியல்லாது நிலையில்லாத வாழ்க்கையை நிலையானது என நம்பி ஒருவன் இன்ப துன்பங்களுக்குள் சிக்கிக் கொள்வானாயின் அவனுக்கு விடுதலை கிடைப்பது அரிதாகும்.
துன்பங்களும் வாழ்க்கை ஒழுங்கினுள் அடங்கும் என்பதை அறிதல் வேண்டும்.
தினந்தோறும் காலையிலும் மாலையிலும் சிறிது நேரமாயினும் சிவத் தியானத்தில் ஈடுபட்டால் வாழ்க்கை ஒழுங்குகள் தாமாகவே சரியாகும்.
எல்லா நியாயமான வேண்டுகோள்களுக்கும் இறைவன் செவி சாய்ப்பான் என்பது திண்ணம்.

***

எப்போதும் வெளிச்சத்துடன் இரு. உனது உள்ளத்தில் ஒளி பெருக வேண்டும்.
நம்பிக்கைக் குறைவு, ஐயம், உலகப் பற்றுகள், ஆசை ஆகிய காற்றுக்கள் அந்த ஒளியை அணைக்காது பார்த்துக் கொள்.

குத்து விளக்குகளை ஏற்றுவது போல நீங்கள் உங்களுக்குள் இருக்கும் அறிவு என்னும் ஒளியை ஏற்றி அந்த ஒளியில் நீங்கள் யார் என்பதை அறிந்து கொள்ள முயற்சியுங்கள்.

உன்னைக் காண வைப்பது உனக்குள் ஒளிரும் ஒளி. ஆனால் உன்னால் அதைக் காண முடியாது.

***

நீங்கள் உங்களைத் திருத்திக் கொள்ளுங்கள். உலகத்தை யார் திருத்தமுடியும்.

புத்தர் வந்தார். இயேசு வந்தார். அவர்கள் தங்களைத் திருத்திக் கொண்டு போனார்களே அல்லாது உலகத்தைத் திருத்தவில்லை.

நீ தூயவன். நீயே நற்சிந்தனை. ஆகவே என்ன செய்ய வேண்டும். தன்னைத் தன்னால் அறிய வேண்டும்.

உலகம் இயற்கையாகவே மயக்கும் தன்மையுடையது. நீ செய்யும் வேலைகளெல்லாம் சிவத்தொண்டென்று களைப்பின்றி சலிப்பின்றி இரு.

இன்பமும் துன்பமும் உலக இயற்கை. நீ அவற்றில் ஈடுபாடில்லாமல் சும்மா பார்த்துக்கொண்டு இரு.

***

சரீரம் மாயையின் வடிவம். அதனை நீ உணரவேண்டும். ஆணவத்திற்கு மாயை சரீரத்தால் உதவுகின்றது.

புலனின்பங்கள் சரீரத்தோடு சம்பந்தப்பட்டவை. நீ சரீரமல்ல. பிரார்த்த கர்மத்தின்படி காரியங்கள் நடைபெறுகின்றன. அவை உடலுக்கேயன்றி ஆன்மாவைத் தாக்க மாட்டா.

ஆனால் மனிதன் தனது செயல்களினால் ஏற்படும் இன்ப துன்பங்களுக்கு ஆளாகி அவை தனக்கேயெனத் தடுமாறி விளங்கித் தத்தளிக்கின்றான்.
ஆனால், தேகம் நானல்லவென நினைத்துக் கொண்டு அதனைப் பேணாமலும் இருக்கக் கூடாது, பேணி வளர்க்கவும் கூடாது.
உனது வாழ்க்கையை நினைத்துப் பார். ஊன்றிக் கவனித்தால் நன்கு விளங்கும். என்ன சுகத்தைக் கண்டாய்?
வாழ்வினைப் பெரியோர் கனவு என்றும், கானல்நீர் என்றும் வருணித்தது எவ்வளவு உண்மை.

***

வாழ்வின் குறிக்கோள் நீ அதுவென்று அறிவதே. அப்போது விடுதலை.
அதை அறியாத மாந்தர்கள் வெளி ஆடம்பரங்களில் காலத்தை வீணாக்குகின்றார்கள்.
குறிக்கோளை அறிந்தவர் இன்பம் எய்துவர். கடவுள் உன்னுடன் என்றும் இருக்கின்றார்.
அவர் உனக்கு வழி காட்டுவார். அவருடன் முரண்படாதே. முரண்பட்டால் உனது விடுதலைப் பாதை நீண்டதாகும்.

***

உலகமாகிய கோயிலுக்கு பலரும் வருகின்றார்கள். நாமும் அப்படியே.
மற்றவர்களின் குறை குற்றங்களைக் கருதாது எங்கள் கடமையாகிய இறை வணக்கத்தை ஒருமை மனமுடையவர்களாகச் செய்வோம்.
உன்னை முழுமையாக இறைவனிடம் ஒப்புக் கொடுத்துவிட்டு நீ இறைவனின் திருவருளின்படி நடப்பாயாக.
நீ இறைவனின் ஒரு கருவியேயாவாய்.

ஒரு பொல்லாப்பும் இல்லை என்று செல்லப்பர் ஓயாமற் சொல்லுவார். இறைவன் எங்கும் எல்லாமாய் இருக்கும் பொழுது பொல்லாப்பு எங்கனம் எழும்.

வெளித் தோற்றத்திற்கு பொல்லாப்பு இருப்பது போலத் தோன்றினாலும் உண்மையில் ஒன்றும் நடக்கவில்லை.

இறைவனிடமிருந்து உதித்த படியால் இவ்வுலகமும் இறைவனேயாகும். எல்லாம் இறைவனின் செயல்களே என்ற படியால் நமக்கு இறைவனின் உதவியும் தேவையாகாது.

***

உலகம் அப்படியேதான் இருக்கின்றது. ஒரு நூதனமும் இங்கில்லை.

நாங்கள் சும்மா பார்த்துக்கொண்டு சாட்சியாக இருப்பதேயல்லாமல் ஒரு நினைவும் தேவையில்லை.

நாங்கள் ஆன்மா. எங்களுக்கு நினைவு ஏன்? நேரம் ஏன்?

எங்களுக்கு நன்மை, தீமை எல்லாவற்றையும் அறிவிப்பது ஆத்மா.

குளிரில் இருக்கின்றோம் என்று நினைத்தால் குளிர்கின்றது. அது போல் உலகில் இருக்கின்றோம் என்று நினைத்தால் உலக காரியங்கள் வந்து தாக்குகின்றன.

எல்லாம் நினைவுதான். ஆசைகளை விட்டால் நினைவு நின்றுவிடும்.

நினைவு ஒடுங்கிய நிலையில் எல்லாம் புலப்படும்.

எங்கள் கிரக பலனின் படி நாங்கள் இங்கே பிறந்திருக்கின்றோம். எல்லாம் எப்பவோ நடந்து முடிந்திருக்கின்றன. நாம் அறியோம்.

ஆன்மாவான நாம் வருவதும் இல்லை போவதும் இல்லை. இறப்பதுமில்லை பிறப்பதுமில்லை.

***

எங்களுக்கு ஒரு குறையுமில்லை. ஒரு குறையுமில்லை என்று உணராதது தான் குறை. கடவுள் எப்போதும் எங்களுடன் இருக்கும் போது என்ன குறை.

மனிதன் சும்மா இருக்கப் பழக வேண்டும். அதுவும் ஒரு வேலை தான். சும்மா இருந்தால் பலம் வரும். ஆனால் வேலையைச் செய். உண்மையில் நீ வேலை ஒன்றும் செய்வதில்லை. அதுவே செய்கின்றது.

அறிவேன் என்பவன் அறியாதவனே ஆவான். அறிவதற்கு ஒன்றும் இல்லை.

சும்மா இரு. அது போதும். அப்போது எல்லாம் அறிவாய்.

உனக்குத் தெரியாதிருந்தால் நீ தூயவன். அறியாதிருத்தல் தூய்மை. அப்போது நீ தாழ்மையுள்ளவன்.

உன்னை நீ அறி. அதுவே உண்மை அறிவு. அதுவரை யாரும் அறியார். அறிய வேண்டியது எதுவோ, அது அறியவொண்ணாதது. விபரிக்க முடியாதது. சொல்லவொண்ணாதது.

உனது உயர்வான ஆத்மா உன்னை வழி நடத்தும்.

***

சிருஷ்டியில் அணுவும் பிழையாது.

எல்லாம் எங்களுக்கு அளந்தபடிதான். கூடுதலோ குறைதலோ இல்லை.

உண்மையை உணர்ந்த பெரியோர்களையும் பிராரத்துவ வாசனை வாட்டுமன்றோ.

ஒவ்வொரு நேரம் பிரபஞ்சப் பொருட்கள் மீது மனம் சென்று இடருறவும்

நேரிடும்.

என்செயல் என்பது அறியாமை. அவன் செயல் என்பது ஞானம்.

இறைவன் வேறு நான் வேறு என்பது அறியாமை. இறைவனே இருக்கின்றான் நான் என்பதில்லை என்று உணர்வது ஞானம்.

***

என்னைப் பின்பற்றாதே. எவரையும் பின்பற்றாதே. உன்னையே நீ பின்பற்று.

உனக்குள் தான் எல்லாம். உனக்குள் கடவுள் இருக்கின்றார். கூற வேண்டியதைக் கூறுவார். உனக்கு விளங்கிவிட்டால், நீ விரும்பியபடி நடக்கலாம்.

எல்லாம் ஆத்ம இயக்கமே. எல்லா அசைவும் எல்லா மாற்றங்களும் ஆத்ம இயக்கமே. நம்மால் ஆவது ஒன்றும் இல்லை.

நீ கடவுள். ஆனால் அதை நீ அறியாய். நீ அறிய வேண்டிய தேவையும் இல்லை. நீ கடவுள் என்பதை உணர்.

அப்போது எல்லாம் உன் ஆணையின் கீழ். அஹம் பிரமாஸ்மி; நீ கடவுள். இங்குள்ள ஒவ்வொருவரும் நீயே. நீ எங்குமுள்ளாய். அதனை அறி. அதுவே சாதனை.

***

பார்ப்பதெல்லாம் சிவனாகப் பார். செய்வதெல்லாம் சிவத்தொண்டாகச் செய்.

நான் எனது என்பதனை விட்டு விடு. உலகமெல்லாம் சிவமயமாய் இருக்கும் போது நான் எனது என்று எவ்வாறு கூற முடியும்.

கடவுளை அறிய வேண்டுமென்று முயற்சிக்காதே. அவர் எங்கும் உள்ளவர். உன்னிலும் என்னிலும் உள்ளவர் அவரே.

அவர் உனக்கு வேண்டியதை அறிவிப்பார். நீ யாரையும் ஒன்றும் கேட்கத் தேவையில்லை.

தன்னைத் தன்னால் அறிவது போல் கடவுளைக் கடவுளாற் தான் காணலாம்.

இன்பமும் துன்பமும், இகழும் புகழும் மாறி மாறி வரும். இது உலக இயற்கை.

நீ இவற்றைக் கண்டு கலங்காதே. நீ உன்னை அறிந்து, இனிப் பிறவாமல் இருக்கப் பார்.

***

எல்லோரிலும் நீ ஈசனைக் காண். ஒரு கடவுளே பலவாக இருக்கின்றார். எல்லோரும் உனது நண்பர்கள். எல்லோரும் உனது பகைவர்கள். ஒருவன் உன்னைப் புகழலாம் அல்லது இகழலாம். அதனால் உனக்குப் பாதிப்பு ஒன்றும் இல்லை.

நாம் ஒன்றும் அறியோம் என அறிவதே முடிந்த முடிவு. அதையே செல்லப்பரும் சொன்னார்.

எல்லாவற்றையும் கடந்த பின்பு நீ அந்நிலைக்கு வருவாய்.

எல்லாம் கனவு. நான் கனவு காண்கின்றேன். நீ கனவு காண்கின்றாய். நித்திரை கலையும் வரை எல்லாம் கனவுதான். எல்லாம் மாயை.

மாயை அகலும் வரை நீ எதுவோ அதனைக் காண மாட்டாய். நீ எதுவோ நானும் அதுவே. ஆத்ம விசாரணை மூலம் நீ அதை அறிவாய்.

***

எப்பவோ முடிந்த காரியம். எல்லாம் எங்களுக்கு அளந்தபடியே.

நாங்கள் செருப்பைப் போல தேகத்தைப் பாவிக்க வேண்டும். வருத்தம் வந்தால் வரட்டும். அதுவும் நியமித்தபடியே.

ஏன் வந்தது ? எப்படி வந்தது ? என்று ஆராய்வதில் பயனில்லை. எல்லாம் எங்கள் கர்ம வினைப்படியே நடக்கின்றன.

எங்களுக்கு வரும் வருத்தமும் ஒரு வரப்பிரசாதமே. கர்மம் அனுபவித்தே முடியும்.

இவ்வுடம்பை எடுத்தவன்றே பிரார்த்தப்படி எல்லாம் நியதியாயிற்று. வினை போகும், வினையோடு வந்த உடல் போகும். நமக்கென்ன.

***

செல்லப்பா சுவாமி யோகருக்கு உபதேசித்த "சும்மா இரு" என்பதன் விளக்கம் என்ன?

ஆன்மா எப்பொழுதும் சும்மாதான் இருக்கின்றது. அசைவு தேகத்திற்கும் மனத்திற்கும் தான்.

"நற்சிந்தனை"யில் சுவாமி "கூத்தாடுதே மனம் என்ன கொடுமையிது" என்று தனது குருவிடம் மன்றாடுகின்றார்.

மனம் அலையாமல் இருத்தலே சும்மா இருப்பது. சும்மாயிருப்பதுவே சூட்சுமம். அலைபாயும் மனத்தை அடக்கி ஆத்மாவில் ஒன்றி விட்டால் எல்லாம் தெரியும்.

ஒவ்வொரு மனிதனுக்கும் காமம், குரோதம், மோகம், பகை எல்லாம் உண்டு.

கண் ஓரிடம் செல்லும், காது வேறிடம் செல்லும், ஒவ்வொன்றும் தத்தமது தொழிலைச் செய்கின்றன.

நாங்கள் சாட்சிகளாக பார்த்துக் கொண்டு சும்மா இருப்போம்.
உனக்கு அறிவதற்கு ஒன்றும் இல்லை ஆகையால் சும்மா இரு.
நீ சும்மா இரு. எல்லாம் இயல்பாகவே நடக்கும். உனது முயற்சியால் நடப்பது யாதொன்றும் இல்லை. இதனைச் செய்தோம் அதனைச் சாதித்தோம் என்று இறுமாப்படையாதே. நீ சும்மா இரு.
கண்களை மூடிக்கொண்டிருந்தால் போதாது. மனம் மூடவேண்டும். அதுதான் சும்மா இருப்பது.

***

நாங்கள் எங்குமிருக்கின்றோம். நாமே எல்லோரும். எல்லோரும் நாமே.
ஒன்றிலும் முட்டாமல் கருமம் செய். எல்லாம் ஒரு மயக்கமே.
ஞானமும் ஒரு மயக்கம். சும்மா இருத்தலே மெத்தச் சுகம்.
எல்லாமே ஒன்றுதான். பிரபஞ்சம் வேற்றுமையாகவும், இன்ப துன்பங்களாகவும் தோன்றும்.
ஆனால் எல்லாம் ஒன்று தான். காண்பவனும் காணப்படுவதும் கூட ஒன்றுதான். வேற்றுமைகள் எங்கள் கற்பனைகளே.
எந்த ஒருவனுக்கும் தனிமகத்துவம் அளிக்காதே. எல்லா மகத்துவமும் எல்லோருக்கும் இறைவனிடமிருந்தே வருகின்றது.
கடவுள் உன்னுள் உறைகின்றார் என்று உணரும் வரையுமே அறியாமை நிலைக்கின்றது. உடல் உன் வசிப்பிடம். நீ இறைவனின் வசிப்பிடம்.
மனிதனின் உடலில் உறையும் சீவனே சிவன். உடலின் இயக்கங்கள் யாவும் அவனது இயக்கங்களே. உலகின் இயக்கங்கள் யாவும் பிரம்மத்தின் இயக்கங்களே.

***

எப்பவோ முடிந்த காரியம். நீ காரியங்கள் உன்னால் தான் நடப்பதாகவும், உன்னால் முடியுமென்றும் நினைத்துப் பந்தப்படுகின்றாய்.
ஆனால், காரியங்கள் எல்லாம் எப்பவோ முடிந்திருக்கின்றன. நீ அவசரப்படாதே, ஆத்திரப்படாதே.
இவ்வுடம்பை எடுத்த அன்றே பிரார்த்தப்படி எல்லாம் நியதி ஆயிற்று.
நோய் நொடியும் அப்படியே. ஆகவே இந்த நோய் ஏன் வந்தது எப்படி வந்தது என்று விசாரிக்க வேண்டியதில்லை.
எங்களால் ஆவது ஒன்றுமில்லை. எல்லாம் எப்பவோ முடிந்த காரியம்.
அவரவர் செய்த பழைய வினைக்குத் தகவே யாவர்க்கும் யாவையும் சரியாக அளந்தளிக்கப்பட்டுள்ளன. இந்த நியதியை மாற்ற முடியாது.
எல்லாம் எப்பவோ முடிந்த காரியங்களாகும். அதன் படியே எல்லாம் நடக்கின்றன.

***

ஒரு பொல்லாப்பும் இல்லை. இறைவனிடத்திலே எல்லாம் தோன்றி, எல்லாம் நிலை பெற்று எல்லாம் ஒடுங்குகின்றன. ஆகையால் ஒரு பொல்லாப்பும் இல்லை.
எல்லா உயிர்களுமாய் இருப்பது அவனே. எல்லாம் அவன் செயலே. ஒரு பொல்லாப்பும் இல்லை.
இவ்வுலகம் அழிவதால் நட்டமும் இல்லை, வாழ்வதால் இலாபமும் இல்லை. ஒரு பொல்லாப்பும் இல்லை.

ஒரு பொல்லாப்பும் இல்லை. கொலையும் இறைவனின் ஐந்தொழில்களில் ஒன்று. அதை நானும் செய்யேன், நீயும் செய்யாய்.

அதுவும் உலகின் தேவையே. அதனைப் போலவே ஒரு பொல்லாப்பும் இங்கில்லை.

ஒரு பொல்லாப்பும் இல்லை. இன்பமும் துன்பமும் மனத்திலேயே உள்ளன.

பொல்லாப்பிங்கில்லை என்று போதனை செய்வான். புகழ்ச்சியும் இகழ்ச்சியும் ஒன்றாகக் காண்பான். செல்லப்பனென்னும் திருப்பெயருடையான் சிங்கார நடையோடு சிரிப்பினையுடையான்.

***

நீ உடலன்று, மனமன்று, புத்தியன்று, சித்தமன்று. நீ ஆத்மா. ஆத்மா ஒருநாளும் அழியாதது.

புலனின்பங்களில் மனத்தைச் செலுத்தாது மனத்தை ஆத்மாவில் இலயிக்கச் செய்தலே பேரின்பம்.

ஆன்மாவே நீ. இதனைத் தெரிந்து கொள். நான் என்ற ஆணவம் அழியும் போது, உனக்கு விடுதலை.

குத்து விளக்கை ஏற்றுமாப் போல உங்களுக்குள்ளே இருக்கும் வெளிச்சத்தை ஏற்றினால் ஆத்மாவைக் காணலாம். அதுவே உங்கள் குறிக்கோள்.

நாங்கள் என்றும் நித்தியமான ஆத்மா என்பதற்கு எவருடைய அத்தாட்சியும் தேவையில்லை.

ஆத்மா ஒரு நித்திய வஸ்து. அது இங்குமங்கும் எங்கும் உள்ள சித்து. ஆத்மா அழியாததென்று அன்றெனக்குச் சொன்ன மொழி. நான் மறந்து போவேனோடி கிளியே, நமக்குக் குறைவில்லையடி.

பொன் மண்ணுக்குள் உள்ளது. அதை எடுத்துப் பக்குவம் பண்ண வேண்டும். ஆன்ம சக்தியும் அப்படியே.

***

நாம் அறியோம் என்று சொன்னான் எங்கள் குருநாதன்.

நான் அறியேன். நானும் மற்றவர்களைப் போலவே. நீ ஏன் அறிய விரும்புகின்றாய்? எதனை அறிய விரும்புகின்றாய்?

நீ அறிய வேண்டிய விடயம் ஒன்றுதான். அது நீ யாரென்பதேயாகும்.

நீ கடவுள், ஆனால் அதை நீ அறியாய். அதை நீ அறியும் வரை ஒன்றையும் அறியமாட்டாய். கடவுள் உன்னுள் உறைகின்றார் என்று உணரும் வரை அறியாமை நிலைக்கின்றது.

ஆத்மா எல்லாம் அறிந்தது. நீ ஒன்றும் அறியமாட்டாய்.

நாம் அறியோம் என்பதே முடிந்த முடிவு. சிந்தனை செய், சிந்தனை செய். அப்போது நான் அறியேன் என்று அறிவாய். அறிவதற்கு ஒன்றும் இல்லை.

***

நீ உன்னை அறியும் போது நீ பிரம்மமே என்பது உனக்குப் புலனாகும்.

அந்தப் பிரம்மமே எங்கும் நிறைந்திருக்கின்றது. உன்னை நீ எல்லாவற்றிலும் காண்.

எங்கும் ஒரே இயந்திரம் தான், அதனை இயக்குவதும் ஒரே சக்திதான். உன்னை அறியும் போது அதனை நீ உணர்வாய்.

தன்னைத் தன்னால் அறிவதற்கு மனம் ஒடுங்க வேண்டும். அலையும் மனத்தை அடக்க வேண்டும். நீ சும்மா இரு.

தன்னை அறிந்தால், தானே எல்லாம் என்பது புலனாகும். உலகப் பற்று அகல ஆன்ம தரிசனம் உண்டாகும்.

அதற்கு இடைவிடாது சிவத்தியானம் செய்ய வேண்டும். எல்லாம் சிவமே என்பது புலனாகும்.

தன்னைத் தன்னால் அறியும் போது எல்லாம் ஒன்றேயென்பதும் உலகில் குருவும் இல்லை, சீடனும் இல்லை என்பதும் புலனாகும்.
தன்னைத் தன்னால் அறிந்தவர்கள் தான் எமக்கு நண்பர்கள், காவியுடுத்து தாடியும் விட்டிருப்பவர்கள் அல்ல.

***

சிவத்தியானம் செய். சிவமே நாங்கள். சிவபக்தி ஒன்றே எங்கள் விடுதலைக்கு வழியாகும்.
சிவபக்தி மாத்திரமே மனிதனைப் பாக்கியவானாக்கும். ஆகையால் இடைவிடாமல் சிவத்தியானம் பண்ணு. ஒன்றுக்கும் பயப்படாதே.
வெற்றி உன் சொந்தம். எத்தனை முறை தவறினாலும் தைரியத்தைக் கைவிடாதே.
தவறுதல் சட சம்பந்தமானது. நீயோ அறிவு. நீ ஆத்மா. ஒரு நாளும் அழிய மாட்டாய். எழுந்திரு விழித்துக்கொள். காரியம் கைக்கூடும் மட்டும் வழியில் தங்கி விடாதே.
உற்சாகத்துடன் முன்னேறிச் செல். தன்னைத் தன்னால் அறியும் வரை முயற்சியைக் கைவிடாதே. பகவான் உன்னுடன் எங்கும் வருவார்.

சிவத் தியானம் செய் செய் செய்
அவனே நாமெனல் மெய் மெய் மெய்
அவணியனைத்தும் பொய் பொய் பொய்
அதனை அறிந்து நீ உய் உய் உய்

***

தன்னைத் தன்னால் அறிந்திட வேண்டுமே.
தானாய் எங்கும் செறிந்திட வேண்டுமே.

தன்னை அறிந்தால் தவம் வேறில்லை.
தன்னை அறிந்தால் தான் வேறில்லை.

***

"ஒரு பொல்லாப்பும் இல்லை" என்ற எங்கள் ஆசான் சற்குரு சிவயோகசுவாமிகளின் கூற்றை பின்வரும் அவரது அருள் மொழிகள் விளக்குகின்றன.

"ஒரு பொல்லாப்பும் இல்லை" என ஓயாமற் செல்லப்பர் சொல்லுவார். எங்கும் எல்லாமாய் இறைவன் நிறைந்திருக்கையில் பொல்லாப்பிங்கெவ்வண்ணம் எழும்.

வெளித்தோற்றத்திற்கு பொல்லாங்கிருப்பது போலத் தோன்றினாலும், எல்லாத் தொழில்களும் சரியாகவே நடைபெறுகின்றன. ஏன் எதற்காக என்பதை இறைவனே அறிவார்.

இவ்வுலகில் சமநிலை ஒன்றுள்ளது. பராசக்தி எல்லாவற்றையும் பார்த்துக் கொள்வாள். பொல்லாங்கு எப்படி எழ முடியும்?

ஒரு பொல்லாப்பும் இல்லை. கொலையும் இறைவனின் ஐந்து தொழில்களில் ஒன்று.

உலகம் ஒரு ஒழுங்கிற் தான் நடைபெறுகின்றது. களவெடுப்பவன், கலகம் செய்பவன் எல்லோரும் அந்த ஒழுங்கினுள் தான் இருக்கின்றார்கள்.

உலகில் ஒரு கெடுதியும் இல்லை. ஏனெனில் எல்லாம் கடவுள் மயமே. நான், நீ, அவன், அது எல்லாம் ஒன்றாயிருக்கையில் பொல்லாப்பு எங்கு நிகழும்.

பொல்லாப்பிங்கில்லை என்று போதனை செய்வான். புகழ்ச்சியும் இகழ்ச்சியும் ஒன்றாகக் காண்பான் செல்லப்பனென்னும் திருப்பெயருடையான் சிங்கார நடையுடன் சிரிப்பினையுடையான்.

***

பலர் இருக்கும் போது யோகர் சுவாமி கூறியன.
கடவுள் ஒருவர் இருக்கின்றார்.
அவர் எங்கும் இருக்கின்றார்.
என்னோடும் இருக்கின்றார்.
எனக்குச் சகல சம்பத்தும் உண்டு.

கடவுள் எங்களுக்கு எல்லாவற்றையும் அறிவிப்பார். நாங்கள் ஒரு ஆலோசனையும் பண்ணத் தேவை இல்லை.
நீங்கள் உங்களுக்குள் இருக்கும் இருட்டை நீக்கிப் பார்த்தால் கடவுள் தென்படுவார்.
நீங்கள் எல்லோரும் தெய்வங்கள் தான். தெய்வம் எங்களுடன் இருப்பதால் தான் எங்களுக்கு பேசவும், கேட்கவும், பார்க்கவும் கூடியதாக இருக்கின்றது.
கடவுள் எங்களுடன் இருக்கின்றார் என்பதை விட வேறு புதினம் ஒன்றுமில்லை.
எங்களுக்குள்ளே இருக்கும் கடவுளைத் தேடி கதிர்காமத்திற்கும் காசிக்கும் போகத் தேவையில்லை.
உன்னுள் இறைவன் இருக்கின்றார். இதை நீ நம்பு.

***

சற்குரு சிவயோக சுவாமியின் அருள் மொழிகள் எவ்வாறு அஞ்ஞான இருளைப் போக்குவதற்கு வழிகாட்டியாக விளங்குகின்றன?

நான் எனது என்ற ஆணவத்தில் வயப்பட்டு, ஆசையின் பிடியில் அகப்பட்டு வஞ்சம், பொறாமை, கோபம் மிகுந்து மனிதன் இருளில் வழி தெரியாது தத்தளிக்கும் போது, கலங்கரை விளக்காகத் தரிசனம் தந்தவர் தான் சற்குரு சிவயோக சுவாமி.
பின்வரும் அவரது அருள் மொழிகள் அதனை உறுதிப் படுத்துகின்றன.

நீ உடம்பன்று, மனமன்று, புத்தியன்று, சித்தமன்று.
நீ ஆத்மா.
தன்னை அறிந்தால் தவம் வேறில்லை.
ஆதியும் இல்லை அந்தமும் இல்லை.
சாதியும் இல்லை சமயமும் இல்லை.
அன்னையும் தந்தையும் ஆன்மாவுக்கில்லை.
இன்ப துன்பம் இவையே மாயை.
அன்பு சேர் ஆன்மா அறிவே வடிவம்.

உங்களுக்கு இருக்கக்கூடிய ஒரே குறை நீங்கள் உங்களை யாரென்று அறியாதது தான்.
ஆன்மாவே நாம். அதனைத் தெரிந்து கொள் நீ. எத்தனை பிறவிகள் வந்து போய்விட்டன.
நன்மையென்ன? தீமையென்ன? அறிவு என்ன? அறியாமை என்ன? நாங்கள் ஆன்மா, சாட்சியாக இருப்போம்.
ஆயிரம் நூல்களைப் படித்தாலும் ஞானம் வராது. தன்னைத் தன்னால் அறிய வேண்டும். அறிவை அறிவால் அறிய வேண்டும்.
உலகப்பற்று, மனமாசு அகல ஆன்ம தரிசனம் உண்டாகும். அப்போது நீ யாரென்பதை உணர்வாய்.

***

சற்குரு சிவயோக சுவாமி பிரம்மத்தை பின்வருமாறு விளக்குகின்றார்

இந்த உலகம் ஒரு தவச்சாலை. ஒவ்வொரு உயிரும் தவம் செய்து கொண்டு தான் இருக்கின்றது.

ஒன்றான பிரம்மமே பலவாகத் தோன்றி பல தொழில்களையும் செய்கின்றது.

நானும் அதுதான், நீயும் அதுதான். எல்லாமாகவும் அல்லவுமாகவும் விளங்கும் அப்பொருள் ஒன்றே உலகில் என்றும் உள்ளது.

ஏனையவையெல்லாம் அதனில் தோன்றி அதனில் நிலைத்து அதனில் மறைபவையேயாம்.

இதற்கு ஆதியும் இல்லை, அந்தமும் இல்லை. இது இல்லாத பொருளும் இல்லை.

உன்னுள்ளே உறைவதும் அதுவே. அதை நீ கண்டு அனுபவிக்க தூய்மையான உள்ளம் வேண்டும்.

ஆதாயமாக்குவதும் ஒன்றுமில்லை, இழப்பதும் ஒன்றுமில்லை, ஒன்றும் நடக்கவில்லை.

எல்லையற்ற பிரம்மம் எவ்வண்ணம் எல்லையுள்ளதாகத் தோன்றுகின்றது என்பதனை இதுவரை எவரும் திருப்தியாக விளக்கவில்லை.

உண்மையொன்று. அதுவே பிரம்மம். மற்றவையெல்லாம் மாயை.

***

“ஒரு கடவுள். ஒன்றிற் பல.” என்ற சற்குரு சிவயோக சுவாமியின் கூற்றை அவரது அருள் மொழிகள் வாயிலாக விளக்க முடியுமா?

உலகம் முழுவதிலும் இருப்பவன் ஒரு மனிதனே. அவனே கடவுள். வேறொன்றும் இல்லை.

நீயே கடவுள். கடவுள் உன் கண்களால் பார்க்கின்றார். உன் செவிகளால் கேட்கின்றார். உன் வாயால் பேசுகின்றார்.

எங்கும் இறைவனைக் காண். எல்லாம் பிரம்மம். எல்லாம் ஆத்மா. எல்லாம் ஆன்ம இயக்கமே.

நாங்கள் எல்லோரும் ஒரே ஆட்கள் தான். எமக்குள்ளே இருப்பதுவும் ஒரே இறைவன் தான்.

ஒரே கடவுள், ஒரே சமயம், ஒரே ஆட்கள். நாங்கள் கும்பிடுவதும் அந்த ஒரே கடவுளைத் தான்.

இறைவன் ஒருவனே. அவன் யாவருக்கும் பொதுவாகவுள்ளான். அவனை தனதாக்கக் கூடாது.

கடவுள் ஒருவரே. அவரே எல்லோருள்ளும் உள்ளார். ஒரே சுவாமிதான் எங்கும் இருக்கின்றார்.

வேதங்களும் உபநிடதங்களும் இதனையே கூறுகின்றன. ஒன்றாய் பலவாய் இருக்கும் அவரில்லாத இடமேது.

***

இன்ப துன்பம் இவையே மாயை.

அன்பு சேர் ஆன்மா அறிவே வடிவம்.

ஆதலால் நின்னை அவையோ தீண்டா.

கானல்நீரால் நிலம் கரைவதும் உண்டோ.

நீயே உனக்கு நண்பனும் பகைவனும். உனக்கு உன்னால் இன்பமும் இல்லை, துன்பமும் இல்லை.
ஆன்மாவே நாம் என்பதை நீ தெரிந்து கொள்ள வேண்டும். அப்போது நீ உணர்வாய் இன்பம், துன்பம், சுகம், துக்கம் யாவையும் உனது கற்பனைகளே என்று.

எத்தனை பிறவிகள் வந்து போய்விட்டன.
நன்மையென்ன? தீமையென்ன? இன்பமென்ன? துன்பமென்ன? எமக்கு ஒரு குறையுமில்லை. நாங்கள் சாட்சியாக மாத்திரம் இருப்போம்.

அறிவு வடிவான ஆன்மாவை நீ அறிவால் அறிய வேண்டும்.
இரவும் பகலும் வந்து போவது போல இன்ப துன்பங்கள் வந்து போகட்டும்.
நீயோ ஆத்மா. உனக்கு அவற்றால் ஒரு பாதிப்பும் இல்லை.
இன்பமும் துன்பமும், இகழும் புகழும் மாறி மாறி வரும். அது இயற்கை அஞ்சுவதற்கு ஒன்றும் இல்லை. நீ சும்மா இரு.
ஒன்றும் நடக்கவில்லை. நீயும் பிறந்ததில்லை, நானும் பிறந்ததில்லை. இவையெல்லாம் ஒரு கனவேயாகும். இன்ப துன்பங்களும் அப்படியே.

***

பொறி வழியே போயலையும்
பொல்லா மனத்தை வென்றால்
அறிவறியாமை விட்டு, கிளியே
அரன் பாதம் சேர்ந்திடலாம்.

விடயங்களில் போகும் மனத்தை ஆத்மாவில் இலயிக்கச் செய்ய வேண்டும்.
மனத்தை அங்குமிங்கும் அலைய விடாதே. இன்ப துன்பங்கள் வந்து போகட்டும். அவை உடலையும் புலன்களையும் சார்ந்தது.
நீ ஆத்மா. மனம் சும்மா இருக்காமல் அங்கிங்கெல்லாம் ஓடித்திரிகின்றது. அதனுடைய சுபாவம் அது. ஒழுக்கமாய் நடந்து மனத்தை ஆத்மாவோடு சேர்த்து விடவேண்டும்.

மாலுமி சுக்கானைப் பிடித்துக் கொண்டு மற்ற வேலைகளையும் பார்த்துக் கொண்டு அக்கரை சேர்வதைப் போல ஆத்மஞானம் அடைய வேண்டும் என்ற ஆர்வம் ஒன்றே போதும் உன்னை இறைவன் அடி சேர்க்க.
நீ இப்பிறப்பிலேயே விடுதலையடைய வேண்டுமாயின், புலனின்பங்களில் ஆசையை விட்டு, உன் மனத்தை சுடலையாக்கி எழுகின்ற விருப்பங்களை அச்சுடலையிலே எரித்து விடு.
சமுத்திரத்தில் அலைகள் எழுவது போல மனத்தில் எண்ண அலைகள் எழும். எழும் எண்ணங்களை அடக்கி ஆழுதலே யோகம். அதற்கு மனம் ஒருமைப்பட வேண்டும்.

***

உலகம் ஒரு கனவேயாகும். நேற்று நடந்த முழுவதையும் ஒருவர் இன்றைக்குத் திரட்டிக் காட்ட முடியாது. அது ஒரு கனவு போலாகும்.
இன்று நடப்பது நாளை கனவு போலாகும். நாங்கள் எங்குமிருக்கின்றோம். எங்களுக்கு ஆதியும் இல்லை அந்தமும் இல்லை. பகலிரவில்லை, சுகதுக்கமும் இல்லை. இறப்புப் பிறப்பென்பதும் இல்லை.

நாங்கள் உடம்பில்லை. ஆன்மாவே நாங்கள். பாவம் புண்ணியம் என்றும் எங்களுக்கு இல்லை.

இந்த உலகமும் ஒரு கானல்நீரேயாகும். உண்மை ஒன்று உள்ளது. அந்த உண்மையை அறியும் பொழுது உனக்கு விடுதலை.

நீ உண்மையை அறிய முடியாது. உண்மை உள்ளது. முழுவதும் உண்மையே.

உன்னை எங்கும் காண். உலகம் முழுவதும் நீயே. கடவுளும் நீயே. ஆனால் நீ அதனை அறியாய்.

நீ ஒன்றுக்கும் அஞ்சத் தேவையில்லை. உனது ஆத்மா உன்னை வழி நடத்தும்.

***

உண்மை முழுதுமென ஓதும் ஒரு மொழியால் என்னை மறந்தேன் இடரகன்றேன்.

உண்மையை எவரும் பூரணமாக விளக்க முடியாது. அதுவே எல்லா இயக்கங்களுக்கும் ஆதாரம்.

மாயையின் வேலையும் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றது. ஆயினும் உண்மை ஒன்றே. அதற்கு ஒரு குறையுமில்லை.

உண்மை ஒன்றே. ஏனைய யாவும் மாயை. உண்மையை அறிவதற்கு மயக்கம் தீர வேண்டும். அதற்கு ஆதியும் இல்லை. அந்தமும் இல்லை. அது இல்லாத பொருளும் இல்லை, இடமும் இல்லை. சர்வமும் பிரம்ம மயம் என்றறிந்த ஞானிகள் உண்மையை அறிந்தவர்கள்.

நீ உண்மையை அறிய முடியாது. உண்மை உளது. அதுவே பிரம்மம். நீ எதுவோ அதுவே நானும். அதுவே உண்மை.

உண்மையை நீயுணர வேண்டும். உண்மை உனக்குள்ளே உண்டு. உள்ளே ஆழமாகச் சென்று உண்மையைக் காண். அதுவே நீ.

***

எங்கள் இதயத்தில் இருக்கும் பரம்பொருளே நாங்கள் செய்யும் தொழில்கள் எல்லாவற்றிற்கும் காரணமானவர் என்று நம்ப வேண்டும். நான் உங்களுக்குச் சொல்லக்கூடிய ஒரே விடயம் கடவுள் எந்நேரமும் உம்முடன் இருக்கின்றார் என்பதேயாகும்.

உலகில் கெடுதி எதுவுமில்லை. நன்மை தீமையுமில்லை. ஏனெனில் எல்லாம் கடவுள் மயமேயாகும்.

படைத்தல், காத்தல், அழித்தல் மூன்றையும் அவரே செய்கின்றார்.

***

உள்ளதோடு திருப்திப்படாது, அதிக ஆசைப்பட்டு அலைந்து எதனைக் கண்டோம்?

எங்களுக்கு அளந்த அளவின்படி தான் எல்லாம் நடக்கும். அதை உணராமல் கூடுதலாக முயற்சிப்பதால் பயனொன்றும் இல்லை.

எங்கள் முயற்சியின் பயனாக ஒன்றும் நடக்கவில்லை. இழப்பதும் இல்லை, ஆதாயமாக்கிக் கொள்வதும் இல்லை. சும்மா இரு.

ஒருவருக்குத் தேவையானவை யாவும், அவரது வாழ்க்கை ஒழுங்குகளும், அவரது வினைப்படி, அவர் பிறப்பதற்கு முன்னரே தீர்மானிக்கப்பட்டிருக்கின்றன.

அதன்படியே நடக்கும். எங்கள் முயற்சியால் அல்ல.

***

சற்குரு சிவயோக சுவாமிகள் நாம் யார் என்பதை எவ்வாறு விளக்குகின்றார்?

நாங்கள் ஆத்மா எங்களுக்கு ஒரு குறையுமில்லை.
நமக்கு ஒப்பாரும் மிக்காரும் ஒருவருமில்லை.
நமக்கு இங்கிதம் அங்கிதம் இல்லை.
மரணம் பிறப்பில்லை. நாங்கள் ஆத்மா. உடம்பன்று, புத்தியன்று, சித்தமன்று.
மண்ணாதி ஆசையில்லை, மனமான பேய் இல்லை. நாங்கள் இழந்தது ஒன்றுமில்லை ஆதாயமாக்கிக் கொண்டதும் ஒன்றுமில்லை.
நாங்கள் இருந்தபடியே இருக்கின்றோம். நமக்கு ஒரு குறையுமில்லை. எங்களது உயிருக்குயிராய் இருப்பவர் கடவுளே. ஆத்மாவே நாமென அறிந்த நாங்கள், புலனின்பங்களுக்கு அடிமையாக மாட்டோம்.

நாங்கள் உண்மைப் பொருள். இங்கும் அங்கும் எங்கும் உள்ளோம். நாங்கள் சிவத்தின் அம்சம். இளமை முதுமை, இன்பம் துன்பம் என்பன தோன்றி மறைவன. நாங்கள் தோன்றுவதும் இல்லை மறைவதும் இல்லை. நாங்கள் எல்லாவற்றிற்கும் ஆதியான ஆத்மா. இந்த உண்மையை நீ உணர வேண்டும்.
நீயே நான், நானே நீ. எங்கும் எல்லாமாய் இருக்கும் பரம்பொருளே நீ. உனது செயல்கள் எல்லாம் அந்தப் பரம்பொருளின் செயல்களே. அந்தப் பரம்பொருளே கடவுள். அது நீயென உணர வேண்டும். அப்போது உனக்கு விடுதலை.

***

சற்குரு சிவயோக சுவாமி ஆன்மாவைப் பற்றி என்ன கூறுகின்றார்?

ஆன்மா பளிங்கு போன்றது. ஆன்மாவை எங்களால் அளக்கமுடியாது. அது தொடக்கமும் முடிவும் இல்லாதது.
எங்கும் வியாபித்திருப்பது ஒரே ஆத்மாவே. நாம ரூபங்கள் வேறு படலாம்.
ஆத்மா களங்கமில்லாத பளிங்கு போன்றது. இருளடைந்த உடலே புலனின்பங்களை நாடுவது.
ஆன்மா எப்பொழுதும் சும்மா தான் இருக்கின்றது. அசைவுகள் எல்லாம் தேகத்திற்கும் மனத்திற்கும் தான்.
ஒரு அழுக்கும் ஆத்மாவை பந்திக்க முடியாது. ஆத்மாவை நீ தரிசிக்க வேண்டுமானால் மனத்தினைக் கட்டுப்படுத்தி மாசை அகற்ற வேண்டும். கடவுளை அறியவேண்டும் என முயலாதே. கடவுள் ஆத்மாவாக உள்ளே இருக்கின்றார்.

ஆத்மா ஒரு நித்திய வஸ்து. அது இங்குமங்கும் எங்குமுள்ளது. அந்த நித்திய வஸ்துவிலேயே மனிதன் உறைகின்றான்.
மாயை இடையறாது மாறிக் கொண்டே இருக்கின்றது. மாறாது இருந்து கொண்டு மாற்றங்களைச் செய்விப்பது தான் ஒரே உண்மைப் பொருள்.
"ஒரு பொல்லாப்பும் இல்லை" என்று செல்லப்பர் சொல்லுவார். ஒன்றான ஆத்மாவே பலவாகத் தோற்றமளிக்கையில் எவ்வாறு பொல்லாப்பு எழும்?

***

நாம் இருக்கின்றோம் என்ற நம்பிக்கை என்றும் இருக்க வேண்டும்.
நாம் ஆத்மா. அது என்றும் அழியாதது. இதை நீ தெரிந்து கொள்ள வேண்டும்.

உடலுக்கு எத்தனை பிறப்பு இறப்புகள் வந்து போய்விட்டன! நன்மையென்ன தீமையென்ன? அறிவு அறியாமையென்ன? நாம் ஆத்மா எப்பொழுதும் எல்லாவற்றிற்கும் சாட்சியாக இருக்கின்றோம்.
கடவுள் ஆத்மா, உலகம், எல்லாம் ஒன்றே. குரு எங்கே, சீடனெங்கே எல்லாம் ஒரே பிரம்மம். எல்லாம் சிவம்.
கடவுளைத் தேடி நீ காசிக்கும் கதிர்காமத்திற்கும் போகத் தேவையில்லை. கடவுள் உனக்குள்ளே ஆத்மாவாக இருக்கின்றார். உன்னை வழி நடத்துகின்றார்.
நான் என்பதை விட்டு விடு. பார்ப்பதெல்லாம் சிவமாகப் பார். செய்வதெல்லாம் சிவத்தொண்டாகச் செய். நீ எதுவோ அதுவே அவரும். நான் என்ற அகந்தையும் ஆசையும் அகன்றால், உனக்கு விடுதலை. நீ நித்திய வாழ்வைப் பெறுவாய்.
எல்லாம் ஒன்று. வெளித் தோற்றங்கள் தான் வித்தியாசம். உலகம் முழுக்க உள்ளதும் ஒன்றே ஒன்றுதான். நீயும் நானும் ஒன்றுதான்.

***

ஒரு சிறு பூச்சியிலும் பூரண ஞானியிலும் இருப்பது ஒன்றே. அதுவே கடவுள், பிரம்மம், ஆன்மா.
கடவுள் உள்ளே இருக்கின்றார். அவரைத் தான் நாங்கள் வெளியே வைத்துக் கும்பிடுகின்றோம்.
சர்வம் பிரம்ம மயம் என்றறிந்த ஞானி சித்திகளைப் பற்றி சிந்திப்பதில்லை.
ஒரு பொல்லாப்பும் இல்லை. ஒன்றே எல்லாமாய் பலவாய் இருக்கும் பொழுது எவ்வாறு பொல்லாப்பு எழக்கூடும்.
ஒருவர் தான் ஆன்மா என்பதை மறவாமல் வாழவேண்டும். ஒரு விதத்திலும் மயங்கக் கூடாது.

கடவுள் உன்னுள் உறைகின்றார் என்று உணரும் வரையுமே அறியாமை நிலைக்கின்றது.

எல்லோரிலும் எல்லாவற்றிலும் தெய்வத்தைக் காண். பார்ப்பதெல்லாம் நீயே என்ற உண்மையில் உறைந்து நில். நீ தெய்வத்துள், தெய்வம் உன்னுள்.

உன்னை நீ எங்கும் காணுவாயானால் அதுவே இறை தரிசனமென்று உணர்.

நாங்கள் எங்குமிருக்கும் ஆன்மாவே. எங்களுக்கு ஆதியுமில்லை அந்தமுமில்லை.

பகலிரவில்லை, சுகதுக்கமுமில்லை. இறப்புப் பிறப்புமில்லை.

நான் ஆன்மா என்று நினைத்து ஒழுங்காய்ச் சாதனை செய்து வர ஆன்மாவும் கடவுளும் இரண்டல்ல என்பது விளங்கும்.

தன்னைத் தன்னால் அறிந்து தானே தானாயிரு. அதுவே திருவடி, அதுவே வீடு.

***

எல்லாம் என்னிடத்தே உண்டாகின்றன. எல்லாம் என்னிடத்தே நிலைத்திருக்கின்றன. எல்லாம் என்னிடத்தே ஒடுங்குகின்றன என்ற தூய்மையான எண்ணம் உடையவராய் இருத்தல் வேண்டும்.

அவன் மனம் எந்நேரமும் மகிழ்ச்சியுடையதாகவே இருக்கும். இகழ் புகழ் இரண்டாலும் மனம் தழும்பான். அவன் அந்தராத்மாவில் சுகிப்பான்.

மக்கள் கெட்ட காரியங்களைச் செய்தால் நிந்திக்காதே. நீ சாட்சியாக மாத்திரம் இரு. சும்மா பார்த்துக்கொள்.

நீ பிரசங்கங்களுக்குப் போகாதே. நீ யாவும் அறிவாய் எல்லாம் உனக்குள்ளே. உன்னில் நீ ஒருபோதும் ஐயுறாதே.

உனக்கு வல்லமைகளோ சித்திகளோ தேவையில்லை. நீ உண்மையை அறியவே விரும்புகின்றாய். அதுவே அறிவு.

நாம் ஒன்றும் அறியோம் என்று அறிவதே உண்மையான அறிவு. உன்னை எங்கும் காண். அதுவே பரம இரகசியம். நீயே அது, அதுவே நீ. பாசத்தை விடு. ஆசையை அகற்று. சாட்சியாக இரு. நீ உடம்பில்லை என்பதை உணர்ந்து சாகுமுன் செத்து விடு.

முழுவதும் மாயை. எல்லாமே மாயை. ஆனந்தமும் மாயையே.

***

எல்லாம் மாறுதலுக்குட்பட்டன போலத் தோன்றினாலும், உனக்கு முன் தோன்றும் எல்லாவற்றையும் அதி உச்சமான, எந்த மாறுதலுக்கும் உட்படாத ஆத்மாவாகக் காணும் பொழுது, ஒரு மாறுதலையும் காணமாட்டாய்.

எஞ்சி இருப்பது பிரம்மம் மாத்திரமே. ஸ்ரீ ஷங்கரர் உண்மை ஒன்று உளது. அதைக் கண்டோம் என்றும் கூற முடியாது. காணவில்லை என்றும் கூற முடியாது. அது பகிரங்க இரகசியம்.

மாயப் பிரபஞ்சம் என்றும் இடையறாது மாறிய வண்ணம் இருக்கின்றது. மாறாது இருந்து கொண்டு மாற்றங்களைச் செய்விப்பது தான் ஒரே உண்மைப் பொருளான பிரம்மம்.

***

அஞ்சுவது யாதொன்றுமில்லை. நாங்கள் உடம்பன்று, மனமன்று, புத்தியன்று, சித்தமன்று. நாங்கள் ஆத்மா. நாங்கள் எல்லோரும் தேவ சன்னிதானத்தில் இருக்கின்றோம்.

பார் எல்லாம் சிவமயம். நான், நீ, ஐயா, தம்பி எல்லோரும் சிவனல்லவா. ஒன்றே எல்லாமாகவும், எல்லாம் ஒன்றாயும் இருப்பதைப் பார். அப்படியிருக்கையில் அஞ்சுவதற்கும், அஞ்சப்படுவதற்கும் என்ன இருக்கின்றது.

உலகில் எல்லாம் கடவுள் மயமாக இருக்கையில் கெடுதி ஒன்றும் இல்லை. அது பொய்த் தோற்றமேயன்றி உண்மை இல்லை.

அஞ்சுவதற்கு யாதொன்றுமில்லை. நீயே உனக்கு நண்பனும் பகைவனும்.

***

உன்னை எங்கும் காண். நீயே முழு உலகமும். நான், நீ, அவன், அவள், அது எல்லாம் ஒன்றே.

நீயே எல்லாமாய் இருப்பதால் உனக்குப் பகைவனும் இல்லை நண்பரும் இல்லை. இழந்ததும் ஒன்றுமில்லை, ஆதாயமாக்கிக் கொண்டதும் ஒன்றுமில்லை.

எண்ணிறந்த பிறவிகள் வரட்டும். நீ மெதுவாகச் சென்று அடைய வேண்டிய இடத்தை அடை. வழியில் தங்கி விடாதே.

அவசரம், துன்பம், கவலை தேவையில்லை. நீ உன் வழியே செல். அஞ்சுவதற்கு ஒன்றுமில்லை. உனது ஆத்மா உனக்கு வழிகாட்டும்.

நீ அறிவதற்கு ஒன்றுமில்லை. எல்லாம் உண்மையே. நான் ஒன்றும் அறியேன்.

உண்மையை அறியும் வரை நீ செல்ல வேண்டிய வழியில் செல். உண்மையை ஒருவரும் பூரணமாக விளக்கவில்லை.

அது என்றும் எங்கும் இருக்கின்றது. எல்லாச் செயல்களுக்கும் அதுவே காரணம். அது நன்மை தீமை இரண்டிற்கும் மேலானது.

உண்மை ஒன்றே, மற்றவை யாவும் மாயை.

***

கூத்தாடுதே மனம் என்ன கொடுமை

கும்பிட்டேன் குருநாதா நான் உன் அடிமை

மேற்கண்ட நற்சிந்தனைப் பாடலின் விளக்கம் என்ன?

மனம் என்று அழைக்கப்படுவது எண்ணங்கள் அல்லது நினைவுகளின் தொகுப்பே.

மனத்தை அங்குமிங்கும் அலைய விடாமல் எங்கும் பிரம்ம சொரூபமாகப் பார்க்க வேண்டும். அப்பொழுது எண்ணங்கள் கட்டுப்படும். அலைகின்ற மனத்தை அடக்குவதற்கு தேவாரத்தைப் பெலத்துப் படிப்பதும் ஒரு வழி.

மனத்தை அடக்க வேண்டும் என்று நினைத்தால் அதுவும் எண்ணம் தானே.

ஒழுக்கமாய் நடந்து மனத்தை ஆத்மாவில் இலயிக்கப் பண்ணவேண்டும். மனம் ஆத்மாவில் இலயித்து விட்டால், சங்கற்பங்கள் அதன் தொழிலாக மாட்டா.

சும்மா இருக்கப் பழகு. மனத்தைத் தடுக்க முயன்றால் அது வேகம் கொள்ளும். தடுக்கத் தேவையில்லை.

தன்னைத் தன்னால் அறிவதற்கு மன ஒடுக்கம் தேவை. ஆசைகள் இல்லாதவிடத்து மனம் அலையாது. மன ஒடுக்கம் ஏற்படும்.

ஆத்மா என்றும் சும்மா தான் இருக்கின்றது. அசைவு தேகத்திற்கும் மனத்திற்கும் தான்.

சும்மா இருக்கின்ற சூட்சுமம் "நீ"

சும்மா இருக்கின்ற சூட்சுமம் "நான்"

சும்மா இருக்கின்ற சூட்சுமம் "எல்லாம்"

உண்மையை அறிவதற்கு இதுவே இரகசியம் இதுவே வழி.

எண்ணங்கள் வராமல் தடுக்க ஒரு வழி, எண்ணங்கள் வந்து போகட்டும் என்று சும்மாவிருந்து பழகல். இன்னுமொரு வழி மௌனத்திலிருந்து வரும் அசரீரி வாக்குகள் என்னவென்று அவதானிப்பதாகும்.

***

தான தருமங்கள் தவமும் புரியுங்கள் ஞான வீடு நமக்கொளி தாமே.
எல்லா உயிர்களையும் ஒன்றாகக் கண்டு, நாங்கள் எல்லோரும் ஒரே ஆட்கள் தான் என்று உணர்ந்து, பிற உயிர்களையும் தன்னுயிராக மதித்து நடக்க வேண்டும்.
தேடிக்குவித்த செல்வம் எல்லாவற்றையும் அனுபவித்து முடிக்கும் வரை யாரால் வாழ முடியும். ஆகவே இயலுமான போது பிறருக்கு உதவி செய்யுங்கள்.

***

பிராணனை அடக்கி ஆளுதல் வேண்டும். விடயங்களில் போகும் மனத்தை ஆத்மாவில் இலயிக்கப் பண்ண வேண்டும்.
மனக்குழப்பம் இல்லாதிருந்தால் எந்தக் கருமமும் சித்தியாகும்.
மனத்தின் அசைவே கர்மம். அசைவின்றி இருந்தால் கர்மம் இல்லை.
ஒருவன் மழையில் நனையாமல் போகத்தெண்டிப்பது போல ஒன்றிலும் முட்டாமல் வாழ வேண்டும்.
மயக்க உணர்வுகளை உதறித் தள்ளிவிட்டு ஆத்மாவில் நிலைக்க வேண்டும்.

***

உண்மை ஒன்றே, ஏனைய யாவும் மாயை.

எவரும் எதையும் இழப்பதுமில்லை, ஆதாயமாக்கிக் கொள்வதுமில்லை. நாம் என்றும் உள்ளோம் எங்கும் உள்ளோம் என்று உறுதியாக நம்பு.
இதற்கு ஆதியும் இல்லை, அந்தமும் இல்லை. இதுவில்லாத பொருள் ஒன்றுமில்லை.
இதுவில்லாத இடமும் இல்லை. எல்லாம் அறிவு மயம்.

***

ஒருவரையும் நம்பாதே. உன்னையே நீ நம்பு.
எதையாவது செய்யும்முன் நின்று பார். உன்னுள் இருக்கும் ஆத்மா பேசும்.
உன்னில் நீ ஐயுறாதே. உன்னிலேயே நீ நில். நீயே எல்லாம். எல்லாம் உனக்குள்ளே. ஏன் ஓடித்திரிந்து பிச்சை எடுக்கின்றாய்.
நான் எதுவோ நீயும் அதுவே. நீ வேறு அவன் வேறல்ல. நீயே உனக்கு நண்பனும் பகைவனும்.
நீ ஆத்மாவே என்பதை நீ உணர வேண்டும். நான் என்ற ஆணவத்தை விட்டால் உனக்கு விடுதலை.
நீ ஒன்றும் செய்ய வேண்டியதில்லை, எல்லாம் தானாகவே நடைபெறும்.
நீ செய்வது உனக்கே. அதை மறவாதே. நீ உலகத்தை திருத்த முயலாதே. உன்னை நீ திருத்திக் கொள்.
உன்னை நீ எங்கும் காணும் போது இறைவனையே காண்கின்றாய். உனது உயர்வான ஆத்மா உன்னை வழி நடத்தும்.

***

நீயே கடவுள். ஆனால் நீ அதனை அறியாய். அறிவதற்கு ஒன்றும் இல்லை. கடவுளை உனக்குள் உணர். அப்போது எல்லாம் உன் ஆணையின் கீழ்.

நீ தெய்வம், நான் தெய்வம். இருவரும் ஒன்றே. பிரிவில்லை. நீ எங்கும் உள்ளாய்.

இதை அறி. அது சாதனை. உன்னை எங்கும் காண்பது தான் பரம இரகசியம்.

சும்மா இரு என்பது ஒரு கட்டளையில்லை. ஆத்மா எப்பொழுதும் சும்மா தான் இருக்கின்றது. அங்கு இலாபமும் இல்லை, நட்டமும் இல்லை.

நீ சும்மா இரு. ஒன்றையும் சிந்திக்காதே. கடவுள் உன்னுள் இருக்கின்றார் என்பதை நிச்சயமாக நம்பு. நீ ஏன் அவரைத் தேடி ஓடித்திரிகின்றாய்?

கதவைச் சாத்துவது போல பஞ்சப் புலன்களையும் அடக்கித் தியானம் செய்ய வேண்டும். இதயம் சுத்தமாக இருக்க வேண்டும். அப்பொழுது நீ உன்னுள்ளே கடவுளைக் காண்பாய்.

ஒரே கடவுள். ஒரே சமயம். ஒரே ஆட்கள். இதற்கு மேல் நான் என்ன சொல்ல முடியும்.

பூரண ஞானம் பெறும் வரை குருடனாகவும், செவிடனாகவும், ஊமையனாகவும் இரு. மௌனம்.

***

அனைவருக்கும் தெய்வம் ஒன்றே
அதை அறிந்து வாழ்வதுவும் நன்றே
முனைத்து நிற்கும் காமக்குரோதம் போக்கு
பின்பு மூவரையும் தேவரையும் ஏவலாக்கு

வினைப்பகையை வெல்வதற்கு மார்க்கம்
குருவே தந்த திருவாக்கு
நினைத்தபடி நீணிலத்தில் வாழ்வோம்
நாம் நித்தியரென்பதை நாளும் மறவோம்.

***

எப்பவோ முடிந்த காரியம். எல்லாம் எங்களுக்கு அளந்தபடியே. நாங்கள் செருப்பைப்போல தேகத்தைப் பாவிக்க வேண்டும்.

வருத்தம் வந்தால் வரட்டும். அதுவும் நியமித்தபடியே. ஏன் வந்தது ? எப்படி வந்தது ? என்று ஆராய்வதில் பயனில்லை. எல்லாம் எங்கள் கர்ம வினைப்படியே நடக்கின்றன.

எங்களுக்கு வரும் வருத்தமும் ஒரு வரப் பிரசாதமே. கர்மம் அனுபவித்தே முடியும்.

இவ்வுடம்பை எடுத்தவன்றே பிரார்த்தப்படி எல்லாம் நியதியாயிற்று.

வினை போகும் வினையோடு வந்த உடல் போகும். நமக்கென்ன.

***

உன்னை ஒருவன் புகழலாம் அல்லது இகழலாம். நீ ஆத்மா. உனக்கு அதனால் ஒரு பாதிப்பும் இல்லை.

நீ என்றும் சாட்சியாக இரு. நீ உண்மையை அறியவே விரும்புகின்றாய். உனக்கு வல்லமைகளோ, சித்திகளோ தேவையில்லை.

தேகத்திற்கும் மனத்திற்கும் நீயே தலைவன். ஆனால் நீ அவைகளல்ல.

நீ இலக்கை அடைவதற்கு பல வழிகள் உண்டு. ஒவ்வொரு சமயமும் ஒவ்வொரு வழியைக் காட்டுகின்றன. நீ உன்னுடைய சொந்த வழியிலே செல்.

உலகம் அழகானதும் தூய்மையானதும் ஆகும். உலகம் புனிதமும் இரகசியமானதும் ஆகும். அந்த முழு உலகமும் உனக்குள்ளே உள்ளது. உண்மையை உணர்.

முழுவதும் உண்மை. உண்மை எங்கும் உள்ளது. அதை நீ எங்கிருந்தும் காணலாம். உனக்குள்ளே தான் உண்மை இருக்கின்றது.

எல்லாம் இரகசியமும் புனிதமும் ஆனது. நீயும் அதுவே. ஆதியும் இல்லை அந்தமும் இல்லை.

***

நீ ஒன்றும் பேசவேண்டியதில்லை மௌனமாக இரு.

நீ ஒன்றும் செய்ய வேண்டியதில்லை சும்மா இரு.

எல்லாம் தானாகவே நடக்கும். நீ உன்னை ஒப்புக் கொடுத்துவிட்டால் போதும்.

மனத்தைக் கட்டுப்படுத்துவதால் வல்லமைகளைப் பெறலாம் ஆனால் உனக்கு அவை அவசியமற்றவை.

உன்னை நீ நாள் தோறும் சோதித்துக் கொள். அதுவே முதற் படி. எல்லாம் ஆத்ம இயக்கமே.

நீ அதனை உணர வேண்டும். உனக்கு அது விளங்கிவிட்டால் நீ விரும்பிய படி வாழலாம்.

பாசாங்கு செய்தல் மிகச் சுலபம் ஆனால் அதை நீ செய்யாதே.

ஆன்மாவே நீ என்று அறியும் அறிவை அருளும்படி இறைவனிடம் வேண்டிக்கொள்.

மனத்தை எண்ணங்களில் சிதற விடாமல் அடக்கிப் பழகி வர மனம் ஆத்மாவில் ஒடுங்கிவிடும்.

***

உலகில் கெட்டவர்களும் இல்லை கெடுதி என்றும் ஒன்றுமில்லை. அப்படியாக எங்களுக்குத் தோன்றுவதேயல்லாமல் உண்மையில் ஒன்றுமில்லை.

உலகில் எல்லாம் கடவுள் மயமாக இருக்கையில் எவ்வாறு கேடுகள் ஏற்படக் கூடும்.

உலகம் ஒரு ஒழுங்கினுட்குட்பட்டே இயங்குகின்றது. களவெடுப்பவனும் கலகம் செய்பவனும் கூட அவ்வொழுங்கினுட்குட்பட்டவர்கள் தான்.

கடவுள் மயமான இந்த உலகம் அருமையானது. ஒரு பொல்லாப்பும் இல்லை. கொலையும் இறைவனின் ஐந்தொழில்களில் ஒன்றே.

கொல்பவனும் கொல்லப்படுபவனும் ஒன்றாயிருக்கையில் எவ்வாறு பொல்லாப்பு நிகழக்கூடும்.

பெரியோர் என்றும் சிறியோர் என்றும் பேதம் வேண்டாம். எல்லோரும் ஒரே உண்மைப் பொருளின் பல வடிவங்களே யாவார். நீ ஒவ்வொருவரிடத்திலும் தெய்வத்தைக் காண்.

உலகம் ஆசை வயத்தது. உலகில் நிகழும் இன்ப துன்பங்களை மெய்யென எண்ணி வாழ்பவர்கள் நீங்கள்.

அவற்றையும் இவ்வுடலையும் மெய்யெனக் கருதாது வாழ்பவன் நான். இதுவே எனக்கும் உங்களுக்கும் உள்ள வேற்றுமையாகும்.

***

நீ ஏதோ உன்னாற் செய்ய முடியுமென்ற மாதிரி ஏன் பலவற்றையும் நினைத்துப் பந்தப்படுகின்றாய்.

காரியங்களெல்லாம் எப்பவோ முடிந்திருக்கின்றன. நீ பிறப்பதற்கு முன்பே உனக்குத் தேவையானவை எல்லாம் ஒழுங்கு

படுத்தப்பட்டிருக்கின்றன.

எத்தனை பிறவிகள் வந்து போய்விட்டன. இழந்தது என்ன? ஆதாயமாக்கிக் கொண்டது என்ன? அறிவு அறியாமையென்ன? ஒன்றுமில்லை, நாங்கள் சாட்சியாக மாத்திரம் இருக்கின்றோம்.

நாங்கள் நித்தியரென்பதற்கு ஒருவருடைய அத்தாட்சியும் தேவையில்லை.

நாங்கள் ஆத்மா. அது பரிசுத்தமானது, பரம இரகசியமானது.

இரவு பகல் வந்து போவது போல இன்ப துன்பங்கள் வந்து போகட்டும். பயப்படாதே. அதனால் உனக்கு ஒரு பாதிப்பும் இல்லை. நீ மரணத்திற்கு அப்பாற்பட்டவன்.

***

கெட்ட காரியங்கள் நல்ல காரியங்கள் என்று எதுவுமில்லை. மக்கள் செய்வது கெட்ட காரியங்கள் என்று நீ நினைத்தால், அவர்களை நிந்தியாதே.

சாட்சியாக மாத்திரம் இரு. செய்வதிலும் செய்யாமையிலும் ஒன்றும் தங்கியிருக்கவில்லை.

நீ ஒரு துறவியாக இரு. ஒன்றிலும் பற்று வைக்காதே. அது போதும்.

குடும்பத்தை விட்டு வெளியேறத் தேவையில்லை. எல்லாம் ஒரு ஒழுங்கிலேயே நடக்கின்றன. அதன் படியே நீ உன் கடமைகளைச் செய். உனக்குள் இருக்கும் குப்பைகளைக் கொளுத்திவிட்டு மனத்தைச் சுத்தமாக வைத்துக் கொள். நீ உலகில் செத்தாரைப் போல வாழவேண்டும்.

அதாவது பற்றின்றி வாழ வேண்டும். ஒன்றை மறவாதே. நீ வரும்போது வெறுங்கையுடன் வந்தாய். போகும் பொழுதும் அவ்வாறே செல்லப் போகின்றாய்.

பூசை வணக்கங்கள் தேவைதான் ஆனால் அதனுடன் நின்றுவிடக் கூடாது. மேலே மேலே செல்ல வேண்டும்.

அதற்கு மன அடக்கம் தேவை. சமுத்திரத்தில் அலைகள் போல மனத்தில் எண்ண அலைகள் எழுந்து கொண்டேயிருக்கும். அந்த எண்ணங்களை அடக்கியாளுதலே யோகம்.

இடைவிடா முயற்சியே இதற்குத் தேவை. அதுவே முதற் படியுமாகும்.

***

தன்னைத் தன்னால் அறிந்து தானே தானாயிரு.

இதுவே திருவடி இதுவே வீடு.

அறிதற்கு ஒன்றும் இல்லை என்பதை நீ அறியும் பொழுது உனக்கு விடுதலை.

நீ பரிசுத்தமான அறிவு. உனக்கு அறிவதற்கு என்ன இருக்கின்றது.

நீ உண்மையை அறிய முடியாது.

அறிய வேண்டும் என்ற எண்ணத்தையும் நீ அகற்ற வேண்டும்.

ஆனால் உண்மை உள்ளது.

அறிவேன் என்பவன் உண்மையில் அறியாதவனே. உண்மையை எவரும் அறியார்.

எல்லாம் பிரம்மம். நான் நீ எல்லோரும் ஒன்றே, அதனை நீ அறிந்து கொள்.

உன்னை எங்கும் காண். முழு உலகமும் நீயே. அறிவதற்கு ஒன்றும் இல்லை.

***

தனது கருமத்தை எவனொருவன் தவறின்றிச் செய்கின்றானோ அவன் கடவுளை இடைவிடாது தியானிப்பவன்.

மற்றவர்கள் உனக்கு ஒன்றும் செய்ய முடியாது. நீ மற்றவர்களுக்கு ஒன்றும் செய்யவும் முடியாது.

நீ செய்வது உனக்கே. தீமையோ நன்மையோ உன் செயல்களின் பலனை நீ பெறுவாய்.

எதனிடத்திலும், எவரிடத்திலும் விருப்பும் வேண்டாம்; வெறுப்பும் வேண்டாம்.

நீ உலகத்தையோ மற்றவர்களையோ திருத்த முயற்சிக்காதே. நீ உன்னையே திருத்து.

நல்வினை, தீவினைகளின் பயன்களை அனுபவிக்க அநுகூலமான கருவியே உடல்.

நற்செயல்களில் ஈடுபடு. ஆனால் எதிலும் இணைப்பின்றி நடந்து கொள். சாட்சியாக மாத்திரம் இரு.

கனவும் அதைக்காணும் வரை உண்மையேயாவது போல், பிறப்புகளும் கனவேயாகும். உண்மையில் நீயும் பிறந்ததில்லை, யானும் பிறந்ததில்லை.

***

இழப்பதும் இல்லை ஆதாயம் ஆக்கிக் கொள்வதும் இல்லை என்ற உண்மையை உணர்ந்த பின் மனிதன் வரும் துன்பங்களை துணிச்சலுடன் தாங்கிக்கொள்ள வேண்டும்.

உனது உயர்வான ஆன்மாவே உன்னை வழி நடத்துகின்றது. நீ அதனை உணர்ந்து கொள்ள வேண்டும்.

உன்னை நீ விளங்கிக் கொள்ளும் வரை நீ மிகவும் கவனமாக இருத்தல் வேண்டும். விளங்கிக் கொண்ட பின் எங்கும் எப்படியும் இருக்கலாம். விரும்பியதைச் செய்யலாம்.

ஒரு கருமத்தைச் செய்வதற்கு தீர்மானிப்பதற்கு முன் நன்றாகச் சிந்தி. உனது உள் உணர்வுக்கு செவிமடு.

நீ உன் வழியே செல். உனது மனச் சாட்சியைப் பின்பற்று. ஒரு பொல்லாப்பும் இல்லை.

உன்னை நீ எங்கும் காண். நீயே உலகம். நீயே தெய்வம். நீ அதனை அறியாய்.

கடவுளை உன்னுள் உணர். அப்போது எல்லாம் உன் ஆணையின் கீழ்.

***

உணரவேண்டும் என்ற எண்ணத்தை விட்டு விடு. உணர்வதற்கு ஒன்றுமில்லை.

நீயும் உணர முடியாது. நானும் உணர முடியாது. நான் யாரோ அதுவே நீயும். நான் எனவும் இல்லை. நீ எனவும் இல்லை.

நீ உண்மையை அறிய முடியாது. அறிய வேண்டிய அவசியமும் இல்லை.

அந்த எண்ணத்தை அகற்றவேண்டும். உண்மை உளது. முழுவதும் உண்மை.

அந்த உண்மையே நீ. உன்னை நீ எங்கும் காண். அதுவே உண்மை. அதுவே பரம இரகசியம்.

சும்மா இரு. அது ஒரு கட்டளை இல்லை. ஆத்மாவே நாம். அது சும்மா உள்ளது.

***

நீ உண்மையை அறியும் வரை, எண்ணிறந்த பிறவிகள் வரும். பிறப்பதும் இறப்பதும் இயற்கை.

நீ மெதுவாகச் செல். அவசரம், துன்பம், கவலை தேவையில்லை. நீ கடவுளென்பதை இன்னமும் அறியவில்லை. அறியும் போது எல்லாம் உன் ஆணையின் கீழ்.

உனக்கு ஒன்றும் வேண்டியதில்லை. நீ சாட்சி. சும்மா பார்த்துக் கொண்டு இரு. உன்னால் ஆவது ஒன்றுமில்லை. எல்லாம் தாமாகவே நடைபெறுகின்றன.

நீ உன்னுடைய வேலையை செய். அது போதும். விருப்பு வெறுப்பை விடு. தரும நெறியில் பிசகாதே.

செருப்பைப் போல தேகத்தைப் பாவிக்க வேண்டும். செருப்பு எங்கள் இலக்கை அடைவதற்கு உதவுவது போல, ஆத்மாவை அறிய தேகத்தின் உதவி தேவை.

நீ பேச வேண்டியதில்லை. நீ ஒன்றும் செய்ய வேண்டியதும் இல்லை. நீ சும்மா இரு.

***

மனத்தூய்மைக்கே கருமமன்றி உண்மையை உணர்வதற்கல்ல. விவேகத்தினாலேயே உண்மை உணரப்படுகின்றது. கோடி கர்மங்களினால் அல்ல.

உன்னை ஒவ்வொரு நாளும் ஆராய்ந்து கொள். ஐய்யுறவும் சந்தேகமும் வைத்திருக்காதே.

உடலை ஓம்ப வேண்டும். உடல் இருந்தால் தான் நீ உண்மையை அறியலாம். உன்னை உணரலாம்.

ஆசையிலிருந்தே எல்லாம் எழுகின்றன. பயம், வெட்கம், பொறாமை, கோபம், வெறுப்பு, விருப்பு எல்லாம் அப்படியே.

ஆசையே எல்லாவற்றிற்கும் அடிப்படையானது. விடயங்களில் போகும் மனத்தை ஆத்மாவில் இலயிக்கச் செய்தால் எங்கும் பிரம்ம சொரூபத்தைக் காணலாம். அதுவே உண்மை.

இன்ப துன்பங்கள் முகில்கள் போல வந்து போகட்டும். எங்களுக்கு அவற்றால் இலாபமும் இல்லை நட்டமும் இல்லை. நாங்கள் இருந்தபடியே இருக்கின்றோம்.

பொன் மண்ணுக்குள் உள்ளது. அதனைத் தோண்டி எடுத்துப் பக்குவம் பண்ண வேண்டும். ஆன்ம சக்தியும் அப்படியே.

***

நீ ஒன்றுக்கும் கவலைப்படாதே. உனது உயர்வான ஆத்மா உன்னை வழி நடத்தும்.

உலகம் முழுவதும் உன்னைக் கவனமாகப் பேணும். உனக்காக நீ வேலை செய். உனக்கு நீயே பொறுப்பாளி.

உனக்கு உண்மை விளங்கும் வரை நீ கவனமாக இருத்தல் வேண்டும். உன்னை நீ ஒவ்வொரு நாளும் சோதித்துக் கொள்ள வேண்டும்.

உனக்கு விளங்கிவிட்டால் உலகத்தவர் போல வாழலாம். ஆடலாம், பாடலாம்.

ஆனால் கருமம் ஒன்றைச் செய்யும் முன் நன்றாகச் சிந்திப்பாயாக. சிந்தனையும் அவசியமில்லை. ஆன்மா மாத்திரமே உள்ளது.

ஆசையிலிருந்தே எல்லாம் எழுகின்றன. புலனின்பங்களில் ஈடுபட்டு மகிழ்வதே மிகப் பெரிய மதியீனம்.

***

நமக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லை. மரணம் பிறப்பு இல்லை. வேண்டுதல் வேண்டாமை இல்லை. மண்ணாதி ஆசை இல்லை. மனமென்னும் பேயுமில்லை. கால தேச வர்த்தமானம் நமக்கில்லை. நாம் இழந்ததும் ஆதாயமாக்கிக் கொண்டதும் ஒன்றுமில்லை.

மனம் குரங்கு போல் கூத்தாடுகின்றது. அது இயற்கை. தினமும் தியானம் செய்வதே மனத்தை அடக்க இலகுவான வழி. படிப்படியாக மனம் ஒடுங்கி வருவதைக் காண்பாய்.

பொறி வழியே போகும் மனத்தை ஆசை எனும் நோய் பீடித்திருக்கின்றது. அதை அகற்ற வேண்டும். நீ ஆத்மா. அதனை மறவாதே.

வெப்பம் தட்பம், இன்பம் துன்பம், இளமை முதுமை இயற்கையின் குணங்கள்.

தோன்றி மறைவன. இவைகளின் தீண்டுதலால் நாமேன் கவலைப்படுவான். இவைகள் தோன்றி மறைவன. நாம் தோன்றுவதும் இல்லை மறைவதும் இல்லை.

***

நீ உடலன்று, மனமன்று, புத்தியன்று, சித்தமன்று.

நீ ஆத்மா. ஒரேயொரு உண்மைப் பொருள்.

நீ இங்கும், அங்கும், எங்கும் உள்ளவன். நித்தியன்.

ஆத்மா நித்தியமானது, பிரிவில்லாதது, பூரணமானது.

ஆத்மா எல்லாவற்றிற்கும் ஆதியானது.

நாங்கள் வந்ததுமில்லை போவதுமில்லை, இருந்தபடியே இருக்கின்றோம்.

ஆத்மாவுக்கு நினைப்பு மறப்பில்லை. மாய மனத்துக்குத் தான் அவையுள்ளன.

தத்துவங்கள், கொள்கைகள் எனப் பல உள்ளன. நீ அவற்றைப் பற்றி மனம் கலங்காதே.

நீ உண்மைப் பொருள். உனது உயர்வான ஆத்மா உன்னை வழி நடத்தும்.

***

நீ பேச வேண்டியதில்லை மௌனமாக இரு.

நீ செய்ய வேண்டியதில்லை. சும்மா இரு.

அது நடக்க வேண்டிய நேரத்தில் நடக்க வேண்டிய முறைப்படி நடக்கும். உனது முயற்சியால் ஒன்றும் நடக்கவில்லை.

உலகம் இயங்குவதற்கு எல்லாம் இன்றியமையாதனவாகும்.

தான் ஆத்மா என்பதை அடிக்கடி ஞாபகப்படுத்திக் கொண்டு மனிதன் வாழ்வினை நடத்த வேண்டும்.

***

உன்னுடைய வாழ்க்கையை சிறிது நேரம் நினைத்துப்பார். எதனை இழந்தாய், எதனை ஆதாயமாக்கிக் கொண்டாய்?

நேற்றைய நினைவுகள் இன்றைக்குக் கனவு. இன்றைய நிகழ்வுகள் நாளைக்குக் கனவேயாகும்.

இந்த உலகமே ஒரு கனவு தான். கனவைக் காண்பவனே உண்மைப் பொருள்.

விருப்பு வெறுப்பை விட்டு விடு. இகழ்ச்சியையும் புகழ்ச்சியையும் சமமாகப் பார்.
தாமரை இலையில் தண்ணீர் போல வாழ். உனக்கு வீடு பேறு சித்திக்கும்.

***

குளிர் என்று நினைத்தால் குளிர்கின்றது. உலகில் இருக்கின்றோம் என்று நினைக்கும் போது பல எண்ணங்களும் வந்து மனதைக் குழப்புகின்றன. நினைவு தான் எல்லாம். கற்பனையே எல்லாம். ஆசையை விட்டால் நினைவு நின்று விடும்.
நினைவு ஒடுங்கிய நிலையே அமைதி. இறந்த காலத்தையும், எதிர் காலத்தையும் நினைப்பதால் பயன் என்ன?
உண்மையில் உலகமும் இல்லை. பார்ப்பதற்கும் ஒன்றுமில்லை. பார்ப்பது போல் இருப்பது வெளித் தோற்றம் தான்.
இறைவன் வேறு, குரு வேறு, தான் வேறு என்ற எண்ணம் அறியாமை. இறைவனும், குருவும், தானும் ஒன்று என்று அறிவதே ஞானம்.
தன்னைத் தன்னாலறிந்து தானே தானாயிருந்தால் அதுவே திருவடி அதுவே வீடு.
உனது முற்சியிலேயே உனது ஆத்ம முன்னேற்றம் தங்கியிருக்கின்றது. உண்மையிலிருந்து உண்மைக்கு உயர்ந்து செல்.

***

கடவுளுக்கு பிறப்பு இறப்பு இல்லை. நீயும் அப்படியே. கடவுள் எப்போதும் வேலை செய்து கொண்டு களைப்பின்றி இருப்பதைப் போலச் சலிப்பின்றி இரு.

உலகில் ஒன்றுதான் பலவாகத் தோன்றி ஒவ்வொரு வேலையைச் செய்கின்றது. எல்லாம் ஒரு ஒழுங்கு முறைப்படியே நடக்கின்றது.
ஆகையால் நாங்கள் அது அப்படி நடக்கவில்லை இது இப்படி நடக்கவில்லை என்று குறைகூறுவதில் பயனில்லை.
நாங்கள் ஒருவருக்கும் கொடுக்கவும் தேவையில்லை வாங்கவும் தேவையில்லை.
கடவுள் எல்லோருடனும் கூடவே இருக்கின்றார். அவரவர் தத்தமக்கு வேண்டுவனவற்றை தாமே பெற்றுக் கொள்ளட்டும்.

***

பிரமச்சரியம், இல்லறம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் எல்லாம் ஒன்றுதான்.
இந்த மடங்களில் தங்கிப் பயணத்தை முடிக்கலாம். ஒரு பொல்லாப்பும் இல்லை.
உன்னுள் உறையும் பரம்பொருளை கண்டு அனுபவிக்க உறுதியான உடலும் தூய்மையான உள்ளமும் வேண்டும்.
விருப்பும் வெறுப்பும் இல்லாமல் சீவிக்க வேண்டும். நீ உனக்குச் சரியாக நடந்து கொள். மற்றவர்களைத் திருப்திப்படுத்த நீ ஒழுக்கத்தைக் கை விடாதே.

***

பிரார்த்த கர்மத்தின் படி காரியங்கள் நடைபெறுகின்றன. எப்பவோ முடிந்த காரியங்கள். ஆன்மாவுக்கு அவற்றால் ஒரு குறையுமில்லை.
நாம் ஆத்மா என்று உணராத மனிதன், இன்ப துன்பங்கள் தனக்கே எனக் கருதித் தடுமாறுகின்றான்.

போகுமிடங்களில் முட்கள் இருக்குமாயின் அவ்விடத்திற்குப் போவதைத் தவிர்க்க வேண்டும் அல்லது கால்களில் செருப்பணிந்து செல்ல வேண்டும்.

துன்பங்களும் வாழ்க்கை ஒழுங்கினுள் அடங்கும் என அறிதல் வேண்டும்.

***

நடுப்பாதை: புத்தர் போதித்தது.

நட்பும் வேண்டாம் பகையும் வேண்டாம். விருப்பும் வேண்டாம் வெறுப்பும் வேண்டாம். உண்மையும் சொல்லாதே பொய்யும் சொல்லாதே.

அதிகம் உணவு உட்கொள்ளாதே, அதிக வேலை செய்யாதே, அதிகம் நித்திரை கொள்ளாதே.

நீ மற்றவர்களுக்குச் செவி சாய்க்காதே. உன் ஆத்மா உனக்கு வழி காட்டும். நீ அந்த வழியிலே செல்.

***

நீயே பிரம்மம். நீயே கடவுள்.

நீ எங்கும் உள்ளாய். நீ பலவீனனாய் இராதே.

நீ எல்லோருக்கும் கட்டளையிடலாம்.

உள்ளிருந்து உலகம் முழுவதற்குமே கட்டளையிடலாம்.

நீ உண்மைப் பொருள். நீ உன் வழியே செல். அஞ்சுவதற்கு ஒன்றுமில்லை.

***

நாளைக்கு வருடப் பிறப்பு. நீங்கள் பலகாரங்கள் செய்வீர்கள்.

நீராடி புது உடை அணிவீர்கள். கோயிலுக்குப் போவீர்கள்.

நானோ சாந்தத்தில் குளித்து, பொறுமை என்னும் உடை அணிந்து, வறுமையென்னும் குருவின் போதனை கேட்டு, தூய்மையான வெண்ணீறணிந்து, வேண்டாமை எனும் செல்வத்தை தருமாறு இறைவனை வேண்டி நிற்பேன்.

எல்லாம் சிவமயம். எல்லாம் இறைவன். நான் யார் ? நீ யார்? அவன் யார்? எல்லாம் ஒன்றென்பதை மனதில் உறுதியாகப் பதித்துக் கொள்.

"அஞ்சுவது யாதொன்றும் இல்லை, அஞ்ச வருவது யாதொன்றும் இல்லை" என்ற ஆன்றோர் வாக்கை நினைவு கூர்ந்து வாழ்க்கைப் பயணத்தை தொடருவோம்.

ஆண்டவனே அன்றி வேறொரு பொருளுமில்லை. அனைத்தும் அவன் செயல். உனது சுமை முழுவதையும் அவன் திருவடியில் இறக்கி வைத்து விட்டு இளைப்பாறு.

அது என்றும் அப்படியே உள்ள காரியம் என்பதை நெஞ்சில் பதித்துக் கொண்டு இயல்பாக இரு. நீ செய்வதிலும் செய்யாமையிலும் ஒன்றும் தங்கியிருக்கவில்லை.

உன் செயல்கள் அனைத்தும் அவன் செயல்களேயாகும்.

அவனன்றி ஒரு அணுவும் அசையாது என்பதே உண்மை. எங்களுக்கு ஒரு குறையுமில்லை. நாங்கள் செய்யும் தொழில்கள் எல்லாம் சிவத்தொண்டே.

எங்கள் கடமைகள் எல்லாம் சிவத்தொண்டே. ஆகவே உங்கள் கடமைகளை வழுவாது செய்யுங்கள். உங்களுக்குக் கடவுள் நல்லருள் புரிவார்.

உலகமெல்லாம் சிவமயமே. எங்களது அசைவுகளெல்லாம் அவரது அசைவுகளே. எங்களால் ஆவது ஒன்றுமில்லை. நாங்கள் சும்மா தான் இருக்கின்றோம்.
உலகத்தில் ஒன்றும் நடக்கவில்லை. எல்லாம் இருந்தபடியே இருக்கின்றன.

***

சிவபெருமான் அத்துவிதமாக இருக்கின்றார். அவரே நான் என்று தியானிக்கும் மகிமை எனக்குண்டு.
ஒருவன் எப்படிப் பாவனை செய்கின்றானோ அவன் அதுவேயாகின்றான். நான் அவனேயென்று தியானம் செய்.
அவனே தன்னைப் பல கோலங்களாக்கி விளையாடுகின்றான்.
நாங்கள் எங்கள் சிறுமைக் குணத்தினால் இயல்பழிந்து தரும வழியினின்றும் தவறுகிறோம்.
தவறுதல் நீங்கித் திடமுண்டாக சிவத்தியானமே சிறந்த கருவியாகும். புலன்களை அடக்கி ஆள வேண்டும். இது தான் தவமென்று பெரியோர் சொல்வர்.

***

அழகான உலகம். மிகவும் தூய்மையான உலகம். முழு உலகமும் உன்னுள்ளேயே உள்ளது.
உண்மையான சன்னியாசியும் உள்ளேயே உள்ளான். வெளி வேடத்திலன்று.
வாழ்வின் குறிக்கோளை உணராத மாந்தர் வெளியாடம்பரங்களில் காலத்தை வீணாக்குகின்றார்கள். தன்னை அறிந்தவர் இன்பம் எய்துவர்.

தத்துவங்கள், கொள்கைகள் பல உள்ளன. அவற்றை அறிந்து நீ மனம் கலங்காதே.

நீ உனக்குத் தெரிந்த பாதையில் செல். எல்லாம் தீமைக்கே என்றும் இராதே. எல்லாம் நன்மைக்கே என்றும் இராதே. நீ நடுவழியில் செல்.

சும்மா இரு. அமைதியாய் இரு. மனம் கலங்காதே. உண்மையை உணரும் வரை உன் பயணம் தொடரட்டும்.

உணர வேண்டும் என்ற எண்ணத்தையும் விட்டுவிடு. உணருவதற்கு ஒன்றுமில்லை. நீயே அதுவாக இருக்கும் போது உணர்வதற்கு ஒன்றுமில்லை.

***

ஒன்றே பிரம்மம். அதிலிருந்தே பல தோன்றுகின்றன.

ஆனால் அது என்றும் மாற்றமில்லாமல் இருக்கின்றது. மாறுவதற்கு ஒன்றும் இல்லை.

நாங்கள் எல்லோரும் தெய்வங்களே. நானும் உங்களைப் போலவே.

நானாயிருப்பதும், நீயாயிருப்பதும் அந்தக் கடவுளே.

கடவுள் எங்குமுள்ளார் நானே நான்.

***

"தபஸ்" என்பது வெப்பம். வெப்பத்தினால் தான் நீ மேலே செல்லவேண்டும்.

நீ உன்னை எரிக்கவேண்டும். அப்போது நீ உண்மையைக் காண்பாய்.

பாசக் கயிற்றை கைவிடு. எல்லாவற்றையும் பார். நீ சாகும் முன்பே செத்து விடு. அப்போது உனக்கு விடுதலை.

நாம் அறியோம் என்பதே முடிந்த முடிவு. அறிவதற்கு ஒன்றுமில்லை என்று அறிந்த பின் நீ அந்நிலைக்கு வருவாய்.
அப்போது உனக்கு உண்மை தெரியும்.

***

சும்மா இரு. அன்பு செலுத்துவதும் ஒரு வேலை. பகைத்தலும் ஒரு வேலை. நீ சும்மா இரு.
உனக்கு ஒருவரும் ஒன்றும் தரத் தேவையில்லை. உனக்கு வேண்டியன ஏற்கனவே உனக்குத் தரப்பட்டுள்ளன.
எங்களுக்கு வரக்கூடிய நோய்கள் எங்கள் தேகத்துடனேயே விளையாடுகின்றன. எங்களுடன் அல்ல.
எல்லோரும் எப்போதும் மோட்சத்தில் தான் இருக்கின்றோம், பூமியிலில்லை. பூமியிலிருக்கின்றோம் என்று நம்புகின்றவர்கள் தாங்கள் யாரென்று தெரியாதவர்கள்.
உலகத்தில் நிலையானது என்று ஒன்றும் கிடையாது. மரணம் நிச்சயம். உடல் அழியும், ஆனால் ஆத்மா ஒன்றே அழிவற்ற ஒன்றேயொன்று. அநுபூதி பெற அஞ்சாமை அத்தியாவசியமாகும். அஞ்சுவதற்கு ஒன்றுமில்லை.
ஆசையே அச்சத்திற்குக் காரணமாகும். உங்கள் மனச்சாட்சியைத் திருப்திப்படுத்த வேலை செய்யுங்கள். புலன்களையல்ல.

***

நாமறியோம் என்று சொன்னான் எங்கள் குருநாதன்
நமக்குக் குறை இல்லை என்றான் எங்கள் குருநாதன்

உங்களுக்கு ஒரு குறையுமில்லை, நாங்கள் யார் என்று அறியாதது தான் குறை.
நாங்களே எல்லாமாய் எங்குமாய் இருக்கும் போது எங்களுக்கு அறிவதற்கு என்ன இருக்கின்றது.
போக்கு வரவு இல்லையென்றான் எங்கள் குருநாதன்.
நீயும் பிறக்கவில்லை நானும் பிறக்கவில்லை. நாங்கள் நித்தியர்.
போக்கும் வரத்தும் இந்த உடலுக்குத் தான்.

***

நான், எனது என்பதனை விட்டு விட வேண்டும். நான் யார், நீ யார், அவன் யார், அவள் யார்? எல்லோரும் ஒன்று தான்.
நீயே எல்லாமாய் எங்குமாய் இருக்கின்றாய். அங்கே நான், எனது என்பதற்கு இடமில்லை.
நீ எதுவோ அதுவே உலகம். எல்லாம் பிரம்மம். நீ தான் முழு உலகமும். நீ எல்லாமுடையாய். எல்லாம் உனக்குள்ளே.
நீ எந்த வேலையும் செய்யும் போது நானும் உன்னுடன் செய்கின்றேன். நானும் நீயும் வேறில்லை. ஒருவனே உளன்.
நீ உன்னை அறிந்தால் உனக்கு எல்லாம் விளங்கும்.
நீ மற்றவர்களுக்காகத் துக்கப்படுவதை விட்டு , உன்னை நீ இன்னும் அறியவில்லையே என்று உனக்காகத் துக்கப்படு.

***

தவத்தால் மேம்பட்டவர்களைக் கூட இந்திரியங்கள் வரம்பு கடந்து இழுத்துச் செல்கின்றன. அவற்றை நாங்கள் வெல்ல வேண்டும்.

அதற்கு ஒரே வழி இடைவிடாமல் சிவத்தியானம் செய்வதேயாகும். மனிதன் விடயங்களைக் கருதும் போது பற்றுண்டாகின்றது.

பற்றுதலால் விருப்பமும் விரும்பிய பொருள் கிடைக்காதவிடத்து சினமும் உண்டாகின்றது.

சினத்தால் மயக்கமேற்படுகின்றது. ஆதலால் நீ உன்னை சிவத்தியானத்தினால் காத்துக் கொள்.

***

எக்கருமத்தைச் செய்யும் பொழுதும் ஊக்கத்தோடும் சிரத்தையோடும் மனமகிழ்ச்சியோடும் செய்துபழகுதல் வேண்டும்.

அப்படிச் செய்து பழகி வந்தால் மன உறுதி உண்டாகும். மனம் ஏகாக்கிர சித்தத்தைப் பொருந்தும். ஆத்ம சக்தி அதிகரிக்கும்.

நாம் ஆத்மா. நாமே எங்குமாய் எல்லாமாய் இருக்கின்றோம். எல்லாம் என்னிடத்தே உண்டாகி என்னிடத்தே நிலைத்து என்னிடத்தே ஒடுங்குகின்றன என்ற எண்ணம் உடையவராய் இருக்க வேண்டும்.

நான் ஒரு பரிசுத்தன் என்றும் எனக்கு ஒரு குறையுமில்லை என்றும் அமைதியாக சிந்தித்தல் வேண்டும்.

***

நீ செய்வதிலும் செய்யாமையிலும் ஒன்றும் தங்கியிருக்கவில்லை.

எல்லாக் காரியங்களும் எப்பவோ முடிந்திருக்கின்றன. ஆனால் நாம் அறியோம். எல்லாம் ஒரு ஒழுங்கு முறையிலேயே நடக்கின்றன.

ஒரு பொல்லாப்பும் இல்லை. உனக்கு விதி வசத்தால் பொருந்துவனவற்றை உவகையோடு ஏற்று நட.

தனிமையாக இருக்கும் பொழுது உனது வாழ்நாளை செவ்வனே நடாத்தும் வகையைச் சிந்தி.
நான் பரிசுத்தனென்றும் எனக்கு ஒரு குறைவும் இல்லை என்றும் நம்பு. ஆண்டவனேயன்றி வேறொரு பொருளுமில்லை. அனைத்தும் அவனே. எல்லாம் அவன் செயலே.
நான் செய்தேன் அவன் செய்தானென்று நலியாதே. உன்னால் ஆவது ஒன்றுமில்லை.

***

உலகம் ஒரு நாடக மேடை. உனக்குக் கிடைத்த பாத்திரத்தை நன்றாக நடி. வேடத்திற்குத் தகுந்த மாதிரி நடி. அவ்வளவே.
நாடகம் முடிந்தவுடன் உடைகளைக் களைவது போல் தான் உலகில் எங்கள் காலம் முடிந்தவுடன் உடலைத் துறப்பதும்.
ஆனால் நாங்கள் ஆத்மா. எங்களுக்கு துவக்கமும் முடிவுமில்லை. நாங்கள் இருந்தபடியே இருப்போம்.

***

எதுவும் வேண்டாம் என்று நினைக்கவும் வேண்டாம், எதுவும் வேண்டும் என்று நினைக்கவும் வேண்டாம்.
உனக்குத் தேவையானவையெல்லாம் நீ பிறக்கும் போதே தீர்மானிக்கப் பட்டு விட்டன.
உலகில் எல்லோரோடும் எல்லார் மத்தியிலும் வாழ வேண்டும். ஆனால் தான் யாரென்பதை மறக்கக் கூடாது.
அதற்கு ஆதியும் இல்லை அந்தமும் இல்லை. அதுவே நாம்.

முற்றாக உணர்ந்த ஞானிக்கு இந்த உலகம் திரையில் தெரியும் படம் போலவே.
உலகம் யாவும் ஒன்றென அறிந்தாலும் இயற்கைத் தோற்றம் இருந்து கொண்டே இருக்கும்.

***

உன்னுடைய வாழ்க்கையை நினைத்துப்பார். எல்லாம் மாற்றமடைந்து கொண்டேயிருக்கின்றன.
ஊன்றி நினைத்தால் விளங்கும். என்ன சுகத்தைக் கண்டாய்? எதனை ஆதாயமாக்கினாய்? எதனை இழந்தாய்? ஒன்றுமில்லை.
இன்பமும் இல்லை துன்பமும் இல்லை. தம்மை அறிந்த ஞானிகள் வாழ்வினை கனவு என்றும் கானல்நீர் என்றும் வருணித்தது எவ்வளவு உண்மை.
மனத்தைக் கட்டுப்படுத்தினால் சில வல்லமைகளைப் பெறலாம். அது செப்படி வித்தை போன்றதே. பயனொன்றும் இல்லை.
மனம் சலனமற்ற தடாகத்தைப் போல பூரண அமைதியாயிருத்தல் வேண்டும்.
நீ உன்னை அறியும் வரை எண்ணிறந்த பிறப்புகள் வரும். மயங்காதே. மெதுவாகச் செல்.
அவசரம், துன்பம், கவலை தேவை இல்லை. உனக்கொன்றும் வேண்டியதில்லை. உன்பாட்டில் செல். உன் வேலையை ஒழுங்காகச் செய்.

***

காயம் அழிந்துவிடும்

காண்பனவும் ஒழிந்து விடும்
மாயமான வாழ்வை விட்டு மலரடியைப் பணிவோமே
ஆன்மா அழியாப் பொருள்
அப்பொருளை அறிந்துவிட்டால்
வீண்பாவனை எல்லாம் வெந்து நீறாய் விடுமே
பொறி வழியே போய் அலையும் பொல்லா மனத்தை வென்றால்
அறிவறியாமை விட்டு அரன் பதம் சேர்ந்திடலாம்.

***

கோயில் குளங்களைக் கட்டுவதனால் என்ன பயன்?

தன்னை அறிவது தான் முக்கியம். தன்னை அறிந்தால் தவம் வேறில்லை.

திருவடி சேர மனம் பரிசுத்தமாக இருந்தாற் போதும். நீ எல்லோரிடத்திலும் உன்னையே காண். எல்லோரிடத்திலும் உன்னையே வளர்த்துக் கொள்.

இன்பமும் துன்பமும், இகழும் புகழும் மாறி மாறி வரும். அது இயற்கை. ஏன் அஞ்சவேண்டும். மனிதன் மரணத்திற்கு அப்பாற்பட்டவன் என்ற நம்பிக்கையுடன் தியானம் செய்ய வேண்டும்.

உலகம் அமைதியாகவே இருக்கின்றது. உலகத்தில் நடப்பனவெல்லாம் மாயை.

இறைவன் எங்கும் இருக்கும் பொழுது பிழைகள் எவ்வாறு இடம்பெறக்கூடும்.

***

தன்னை அறிந்தால் தவம் வேறில்லை

தன்னை அறிந்தால் தான் வேறில்லை
தன்னை அறியச் சகலமும் இல்லை
தன்னை அறிந்தவர் தாபதராமே.

ஆதியும் இல்லை அந்தமும் இல்லை
நீதியும் இல்லை நெறியும் இல்லை
சாதியும் இல்லை சமயமும் இல்லை
ஓதி உணர்ந்தவர் உறுதி மொழியே

நாங்கள் சிவனடியார். ஆதியும் அந்தமும், இறப்பும் பிறப்பும், நன்மையும் தீமையும், சுகமும் துக்கமும் எங்களுக்கு இல்லை. நாங்கள் நித்தியர்.
எதை நீ பாவனை செய்கிறாயோ நீ அதுவேயாவாய். நீ ஆத்மா. அதனை மறவாதே. இதற்கெல்லாம் விடாமுயற்சியும் சலியாமையும் வேண்டும். வெற்றி நிச்சயம். நீ செய்வதிலும் செய்யாமையிலும் ஒன்றும் தங்கியிருக்கவில்லை.
ஆனால் உனக்கு விதி வசத்தாற் பொருந்துவனவற்றை உவகையோடு ஏற்று நடத்து.
கருமம் இல்லாமையை விரும்பாதே. கருமத்தைப் பற்றாதே. இயல்பாய் நட.
சரீரத்தையும் மனத்தையும் பரிசுத்தமாக வைத்துக் கொள். தான் பரிசுத்தனென்றும் தனக்கு ஒரு குறையுமில்லை என்றும் அமைதியாகச் சிந்திக்க வேண்டும்.

***

சீவன் சிவனென்றான் எங்கள் குருநாதன்.

நாங்கள் நோய்களால் வருந்த மாட்டோம் ஏனென்றால் நாங்கள் உடம்பல்ல, ஆத்மா.
மாதாவின் கருப்பைக்குள் மீண்டும் வரமாட்டோம். நாங்கள் இறப்பிறப்பற்ற ஆத்மா.
தன்னைத் தன்னால் அறிந்திடவேண்டும். நீ யாரென்பதை நீ தான் அறிய வேண்டும். வழியை மாத்திரமே நான் காட்டலாம்.
தானாயெங்கும் செறிந்திட வேண்டுமே. நீயே ஆத்மா, நீயே பிரம்மம். எல்லோரிலும் எங்கும் செறிந்திருப்பதும் அதே பிரம்மம் தான்.
உன்னை நீ எங்கும் காண். அதுவே அறிவு. பொன்னிலும் புவியிலும் ஆசை வைக்காதே. வஞ்சம், பொறாமை, கோபம், இம்மூன்றுக்கும் அடிப்படை ஆசையே.
ஆசை இல்லாவிட்டால் மனம் சஞ்சலமடையாது. சஞ்சலமடையாத மனத்தில் தெளிவுண்டு.
தெளிவான மனத்தில் நீ உன் உண்மையான சுய ரூபத்தைக் காணலாம்.

***

மோகத்தை முனி, ஆசையை விடு அதுவே உனது விடுதலைக்கு வித்திடும்.
மிஞ்சிய போகத்திலாவது, போசனத்திலாவது வைத்திருக்கும் ஆசையை அடியோடு தவிர்க்க வேண்டும்.
புலனின்பங்களில் பற்றுதலைத் தவிர்க்க வேண்டும்.
பற்றுதலால் விருப்பமும், விரும்பிய பொருள் கிடைக்கா விட்டால் சினமும், சினத்தால் மயக்கமும் உண்டாகின்றது. மயக்கத்தால் தவறுகள் உண்டாகும்.
பொறி வழியே போந்து, மனம் அலைய அறிஞர் இடம் கொடார்.
ஆத்மாவே தாமென்று அறிந்தவர்கள் ஆசை நோய்க்கு இடம் கொடார்.

அநித்யமான இந்த உலக இன்பங்களில் மயங்காது ஆன்ம இலாபத்தையே குறிக்கோளாகக் கொண்டு தாமரை இலையில் தண்ணீர் போல வாழ்வர்.

***

அறிவேன் என்பவன் அறியாதவனேயாவான்.
ஒருவரும் அறியார். எவரும் எப்போதும் அறிந்ததில்லை. அறிதற்கு ஒன்றும் இல்லை.
அறிவும், அறிபவனும், அறியப்படும் பொருளும் ஒன்றாகவே இருக்கும் பொழுது அறிவதற்கு ஒன்றும் இல்லை.
நான் அறியேன், அறிய விரும்பவும் இல்லை. நீ எதனை அறிய விரும்புகின்றாய்.
"அறியவேண்டும்" என்ற எண்ணமும் ஒப்படைக்கப்பட வேண்டும்.

***

தன்னையறியும் மார்க்கம் மிகவும் செங்குத்தானது. அது இப்போது உண்டானதல்ல. எப்போதும் இருப்பதுதான்.
அதனை அறிவது தான் கடினம். உச்சியை அடைந்துவிட்டால் எல்லாம் தெளிவாகத் தெரியும்.
உண்மையான இன்பத்தை அனுபவிக்கலாம். தன்னைத் தன்னால் மாத்திரமே அறியலாம்.
தன்னை அறிவதற்கு இடையுறா முயற்சியும் ஆசைகளை அகற்றுவதும் அவசியம்.
இந்த உலகம் ஒரு கானல்நீரென்று அறிந்த ஒருவன் ஆசைகளுக்கு இடம் கொடுப்பானா?

எல்லாம் வந்து போகின்றன. எல்லாம் மாறுதலடைந்து கொண்டேயிருக்கின்றன.
நாங்கள் சாட்சிகள் மாத்திரமே. எங்களுக்கு ஒரு குறையுமில்லை. எங்களுக்கு ஒரு தேவையுமில்லை. இதனை நாங்கள் அறியாமல் இருப்பது தான் குறை.

***

பிரம்மம் ஒன்றே உலகாய், உயிராய், உடலாய், ஆணாய், பெண்ணாய், பஞ்சபூதங்களாய் விளங்குகின்றது.
இறைவனிடத்திலேயே எல்லாம் தோன்றி, நிலைபெற்று, ஒடுங்குகின்றன. ஆகையால் ஒரு பொல்லாப்பும் இல்லை.
இறைவன் வேறு, தான் வேறு, குரு வேறு என்பது அறியாமை. இறைவனும் குருவும் தானும் ஒன்றே என்று அறிவதே ஞானம். அதுவே உண்மையான அறிவு.
தத்துவங்கள், கொள்கைகள் எனப் பல உண்டு. அவற்றைப் பற்றி நீ மனம் கலங்காதே. அவற்றால் ஒரு பயனும் இல்லை.
நூல்களை வாசிப்பதாலும் பிரசங்கங்களுக்குப் போவதாலும் நீ ஆதாயமாக்கிக் கொள்ளப் போவதும் ஒன்றுமில்லை.

***

வரவும் இல்லை. செலவும் இல்லை. இலாபமும் இல்லை. நட்டமும் இல்லை. ஆதாயமாக்கியதும் ஒன்றுமில்லை இழந்ததும் ஒன்றுமில்லை. இவை எல்லாம் மாற்றத்தை அடிப்படையாகக் கொண்டன. அது மாற்றமில்லாததும் ஒன்றேயானதுமாகும். அதுவே நாம்.

நான் அது, நீ அது, எல்லோரும் அதுவே. அது எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்டது. எங்கும் உள்ளது, எல்லாமாய் உள்ளது. அது ஒன்றே உண்மையானது. மற்ற யாவையும் மாயை.

நீ அங்கும் இங்கும் அலையாதே. உனது மனம் இறந்தவுடன் நீ அதுவே என்று உணர்கின்றாய். ஒன்றிலும் பற்று வைக்காதே. ஆசையே மயக்கத்திற்குக் காரணம். ஆசையே அச்சத்திற்கும் காரணம்.

***

கடவுள் உள்ளே இருக்கின்றார். அதனால் தான் நீ கடவுளைத் தியானம் செய்யக் கூடியதாக இருக்கின்றது. அவனருளாலே அவன் தாள் வணங்கி என்பது அதனைத் தான்.

எங்களுடன் இருக்கின்ற கடவுளைத் தேடி நாங்கள் காசிக்கும் கதிர்காமத்திற்கும் போகத் தேவை இல்லை.

கடவுளின் அருள் எங்களுக்கு எப்போதும் உண்டு. காற்று எப்போதும் இருக்கின்றது. ஆனால் யன்னலைத் திறந்தால் தான் காற்று வீசுகின்றது. அது போல தன்னைப் பரிசுத்தமாக வைத்திருந்து கடவுளைத் தொழ அருள் வெளிப்படும்.

நான் வேறு, இறைவன் வேறு என்னும் மயக்க உணர்வை விட்டு விட வேண்டும். அவனே சகல சீவர்களாயும், உலகாயும், உயிர்களாயும் இருக்கின்றான் என்று நம்ப வேண்டும்.

சமயங்கள் எல்லாம் ஒன்றையே கூறுகின்றன. அவைகள் கூறுவது எல்லாம் உண்மையே.

நீ பெறவேண்டியதை எங்கிருந்தும் பெறலாம். எல்லாம் ஒன்றே.

நான் எங்கிருந்தாலும் தேவ சன்னிதானத்தில் இருக்கின்றேன் என்று நினைக்கின்றேன்.

அதுவே தூய்மையாக இருப்பதற்கு வழி. மனம் தூய்மையாக இருந்தால் இருதயத்தில் இறைவனைக் காணலாம்.
எங்களுக்கு ஒரு குறையுமில்லை.

***

செல்லப்பா சுவாமி சில ஆண்டுகளாக "ஒரு பொல்லாப்பும் இல்லை" என்று அடிக்கடி சொல்லுவார்.
எவ்வளவு பெரிய உண்மை. படைத்தல், காத்தல், அழித்தல் மூன்றையும் ஒரு பரப்பிரம்மமே செய்யும் போது பொல்லாப்பு எங்கனம் எழக் கூடும்?
"நாம் அறியோம்" என்பதும் அவர் கூறியதேயாகும். ஒரு பொல்லாப்பும் இல்லை என்பதை நாம் அறியோம். உலகில் கெடுதி எதுவும் இல்லை.
அப்படியான தோற்றம் எமக்குத் தான் உள்ளது. எல்லாம் கடவுள் மயமாக இருக்கும் பொழுது நன்மை என்ன? தீமை என்ன?
உலகம் ஒரு ஒழுங்கிற்தான் நடைபெறுகின்றது. அருமையான உலகம். இவ்வுடம்பை எடுத்தவன்றே பிரார்த்தப்படி எல்லாம் நியதியாயிற்று. நோய் வந்தால் அதுவும் அப்படியே. எல்லாம் எப்பவோ முடிந்த காரியம்.

***

அழகானதும் தூய்மையானதுமான இந்த உலகம் உனக்குள்ளே தான் இருக்கின்றது.
வெளியே நீ உலகமாகக் காண்பது மாயை. இந்த உலகத்தையும் வெல்வதற்கு எவ்வளவு போர் புரிய வேண்டி இருக்கின்றது.
இறைவன் உனக்குள்ளே இருக்கின்றார். அவரிடத்திலேயே எல்லாம் தோன்றி, எல்லாம் நிலைபெற்று, எல்லாம் ஒடுங்குகின்றன.
இன்பமும் துன்பமும் மனத்திலேயே உள்ளன. வெளியில் அன்று.

உலகத்தைத் திருத்த என்று வந்தவர்கள் தங்களையே திருத்திக்கொண்டு போனார்கள்.

***

எல்லாம் பிரம்மம். இதுவே உண்மை. சுட்டிறந்த பிரம்மம் சுட்டியறியப்படும் உலகம் முழுவதையும் அடக்கி அதற்கப்பாலும் வியாபகமாகும்.
இதற்கு ஆதியும் இல்லை. அந்தமும் இல்லை. இது இல்லாத பொருளும் இல்லை. இது இல்லாத இடமும் இல்லை.
இதனைத் தவிர உலகில் நிரந்தரமான பொருள் என்று ஒன்றுமில்லை.
எமது ஆத்மாவாகிய இதனை ஒரு அழுக்கும் பந்திக்கமுடியாது.
மூச்சை அடக்க வேண்டாம், தவம் செய்ய வேண்டாம். நீ உன்னை எங்கும் காண்பாயானால் அது போதும்.
நீ ஆன்மா என்று உணருவதே அந்த நிலை. உனது மனம் ஆன்மாவில் ஒடுங்கும் போது அந்த நிலை ஏற்படும்.

***

சிவபெருமான் அத்துவிதமாக இருக்கின்றார்.
அடியேன் அவரே எனத் தியானிக்கும் மகிமை எனக்குண்டு.
ஒருவன் எப்படிப் பாவனை செய்கின்றானோ அவன் அப்படியே ஆகின்றான்.
ஆகையால் "நான் அவனே" என்று உறுதியுடன் தியானம் செய்.
அனைத்தும் அவனே. உன் செய்கைகள் அனைத்தும் அவன் செய்கைகளேயாகும்.
அவனுக்கு இறப்பு பிறப்பு இல்லை. ஆதியந்தமும் இல்லை.

***

உனக்குச் சொல்வதற்கு ஒன்றுமில்லை.

நாங்கள் எல்லோரும் தேவ சன்னிதானத்தில் இருக்கின்றோம்.

இது ஒரு பெரும் சத்தியம். ஒரு பொல்லாப்பும் இல்லை. யாவும் நடந்த படியே நடக்கின்றது.

பயம், அன்பு, பகை, நட்பு இவை யாவும் பகவானுடைய விளையாட்டுக்கள். அவை என்றும் அப்படியே.

நாமும் அப்படியே. பிறப்பும் இறப்பும், நன்மையும் தீமையும், இகழும் புகழும் அப்படியே.

***

ஆண்டவனேயன்றி வேறொரு பொருளுமில்லை. அனைத்தும் அவன் செயல்.

உனது சுமை முழுவதையும் அவனது திருவடிக்கீழ் இறக்கி வைத்து இளைப்பாறு.

அவனே எல்லாம். உன் செயல்களெல்லாம் அவன் செயல்களே. கவலைக்கு இடம் கொடாதே. சரீரத்தையும் மனத்தையும் பரிசுத்தமாக வைத்திருக்க வேண்டும்.

தெய்வத்தை முழுமையாக நம்பு. நீ உலகில் காணும் எல்லாவற்றிலும் அவனே இருக்கின்றான்.

***

மன உறுதி வேண்டும். மனத்தை அலைய விடாது ஆத்மாவில் இலயிக்கச் செய்தால் மெய்ப்பொருளைக் காணலாம்.

கொஞ்சம் கொஞ்சமாக மனத்தினை அடக்கு. மனத்தை இறைவழியில் செலுத்தி தியான சாதனை பழக வேண்டும்.

மெய்ப் பொருளைக் கண்டு விட்டோமானால் இறப்பும் பிறப்பும் ஒரு ஊரிலிருந்து இன்னுமொரு ஊருக்குப் பிரயாணம் பண்ணுவது போலேயாகும்.

சுகதுக்கங்கள் வெளித்தோற்றங்களே. ஆன்மாவில் ஒடுங்கிய ஒருவருக்குக் காலம் இடம் என்பது இல்லை.

ஆனால் ஒருவர் ஒழுக்கத்தில் கவலையீனமாக இருந்தால் தீய பிறப்புகளுக்கு ஆளாகலாம்.

***

அங்கும் இங்கும் அலையாதே. மனத்தை அடக்கு. மனம் இறந்தவுடன் நீ அதுவாகின்றாய்.

அப்போது நீ பளிங்கு போல் பிரகாசிப்பாய். ஆனால் அதில் தன்னும் பற்று வைக்காதே. நீ அதுவாகவே இரு.

நீ குடும்பத்தை விட்டு வெளியேறாமலே துறவியாக இருக்கலாம்.

விடுதலை பெற முதற்படி ஆன்ம விசாரணையே. ஆன்ம விசாரணைக்கு ஆசையை அகற்ற வேண்டும்.

சுகம் அனுபவிக்க வேண்டும் என்ற எண்ணமே யாவுக்கும் மூல காரணம். அச்சத்திற்குக் காரணம் கூட ஆசையே.

***

ஒரு நூதனமும் இங்கு இல்லை. எங்களுக்குள்ளே இருக்கும் அது சொல்லுகிற வண்ணம் செய்வது தானே.

எதைச் செய்தாலும் பற்றில்லாமல் செய்ய வேண்டும். ஆசை இருக்கும் இடத்திற்குப் போகக்கூடாது.
புலன்களை அடக்கினால் இறைவனைக் காணலாம். உங்கள் மனச்சாட்சியைத் திருப்திப்படுத்த வேலை செய்யுங்கள்.
நீ கெட்ட காரியங்களில் ஈடுபடாதே. ஆனால் மற்றவர்கள் கெட்ட காரியங்கள் செய்தால் நிந்திக்காதே. சும்மா அவதானி. சாட்சியாக மாத்திரம் இரு.

***

சமுத்திரத்தில் அலைகள் எழுவது போலவே மனத்தில் எண்ண அலைகள் எழுந்து கொண்டேயிருக்கும்.
அவைகளை அடக்கி மனத்தை ஒருமுகப்படுத்தலே யோகம்.
இறைவனை அடைவதற்கு மனம் ஒருமைப்பட வேண்டும்.
இந்த நிலையை அடைவதற்கு விடாமுயற்சி வேண்டும்.

***

நாங்கள் எல்லோரும் ஒன்றே. ஒரே சாதி ஒரே சமயம்.
ஒரு மாறுதலும் இல்லை. நாங்கள் எல்லோரும் பரிசுத்தமானவர்கள்.
வித்தியாசங்களும் மாறுதல்களும் மாயையே அன்றி வேறொன்றும் இல்லை.
உண்மையை உணர்ந்தோர்க்கன்றி மற்றையோர்க்கு இது புலப்படாது.
இந்த உலகில் வாழும் எல்லோரும் நீயே. நீ எங்குமுள்ளாய் என்றுமுள்ளாய். நீ அறிவதற்கு ஒன்றும் இல்லை. சும்மா இரு.

***

துன்பங்களை எதிர் நோக்கி முன்னதாகவே தயார் செய்ய முயலாதே. துன்பங்களும் வாழ்க்கை ஒழுங்கினுள் அடங்கும். இறைவன் என்றும் உங்களோடு இருக்கின்றார். அஞ்சுவதற்கு ஒன்றும் இல்லை.

ஒருவருக்குத் தேவையானவை எல்லாம் அவர் பிறப்பதற்கு முன்னதாகவே உலகில் படைக்கப்பட்டிருக்கின்றன.

எங்களுக்குத் துவக்கமென்பது இல்லை. எல்லாம் கடவுளின் ஆணையால் நடக்கின்றது என்பதே உண்மை.

நாங்கள் சாட்சியாக இருந்து பார்த்துக் கொண்டிருப்போம்.

***

உலகம் எப்படி இருந்ததோ அப்படியே தான் இருக்கின்றது. சும்மா பார்த்துக் கொண்டிரு.

ஒரு நூதனமும் இல்லை. ஒரு நினைவும் தேவையில்லை. நாங்கள் என்றும் ஆன்மா. கண்களை மூடிக்கொண்டிருந்தால் போதாது; மனம் மூடவேண்டும்.

எல்லாவற்றையும் அறிவதே ஆன்மா. அந்த அறியும் பொருளை அறிவதே அறிவு.

உண்மையில் அறிவதற்கும் ஒன்றும் இல்லை. அறியும் பொருளே அறியப்படும் பொருளாயும் இருக்கின்ற பொழுது எவ்வாறு அறியமுடியும்.

நினைவுகள் தான் எல்லாம். ஆசையை விட்டால் நினைவு நின்று விடும். நினைவுகள் ஒடுங்கிய நிலையை விபரிக்க முடியாது.

***

நாம ரூபங்கள் கானல்நீரைப் போன்றன. உண்மையானவை அல்ல.
எல்லாம் ஒன்றாகவே இருக்கும் போது நாம ரூபங்கள் எவ்வாறு வெவ்வேறாகத் தோற்றமளிக்க முடியும்.
நிரந்தரமில்லாமல், ஒவ்வொரு நொடியும் மாற்றமடைந்து கொண்டு இருப்பவைகளை எவ்வாறு அடையாளப்படுத்த முடியும்?
உன்னுடைய வாழ்க்கையை ஊன்றி நினைத்துப் பார். என்ன சுகத்தைக் கண்டாய்? பெரியோர் இந்த வாழ்வினை கனவு, கானல்நீர் என்று வருணித்தது எவ்வளவு உண்மை.
பிரார்த்த கர்மத்தின் படி காரியங்கள் நடைபெறுகின்றன. அவைகளால் ஆத்மாவிற்கு ஒரு விதமான தாக்கங்களும் இல்லை.
ஆனால் மனிதன் தான் உடலே என்று தடுமாறி செயல்களினால் எழும் இன்ப துன்பங்களால் அல்லற்படுகின்றான்.

***

கோவிற் தரிசனம் நன்று. ஆனால் உன்னுடன் என்றும் இருக்கும் கடவுளைத் தேடி நீ கதிர்காமத்திற்கும் காசிக்கும் போகத் தேவையில்லை.
உருவ வழிபாட்டிலிருந்து அருவ வழிபாட்டிற்குச் செல்ல வேண்டும். அப்போது ஒன்றோ இரண்டோ என்னும் சந்தேகம் ஒழியும். ஒருமைப்பாடே பலம்.
நாம் எல்லோரும் ஒன்றே. கிறிஸ்துவும் ஒன்றே. மாணிக்கவாசகரும் ஒன்றே. தாய் தகப்பன் ஆத்மா எல்லாம் உன்னுள்ளே தான்.
சிவனும் சக்தியும் நீயே. ஆசையைத் துறக்கும் வரைக்கும் நீ அதனை அறிய மாட்டாய்.

பரிசுத்தமான, அழகான, தூய்மையான உலகமும் உனக்குள்ளேயே உள்ளது. உண்மையான சன்னியாசியும் உள்ளே உள்ளான். வெளி வேடத்திலன்று.
நீ எல்லாமுடையாய். பரலோக அரசாட்சி உன்னுள்ளே உள்ளது. நீ ஏன் ஓடித்திரிந்து பிச்சை எடுக்கின்றாய்.

உனக்கு நண்பர்களும் இல்லை பகைவர்களும் இல்லை. நீயே ஒன்றாய் எல்லாமாய் இருக்கும் போது எவ்வாறு நண்பர்களென்றும் பகைவர்களென்றும் கூறமுடியும்.
நாம ரூபங்கள் கானல்நீர் போன்றவை. கானல்நீர் பொய்த் தோற்றமேயன்றி உண்மையல்ல.
நாம ரூபங்களால் வேறுபடுத்திக் காட்டப்படும் உடல்களும் நாமல்ல.
மனம், வாக்கு, காயம் மூன்றும் சும்மா இருக்க வேண்டும். ஒருவனைக் கூடாதவன் என்று நினைக்கும் நினைவே நினைப்பவனுக்கு நஞ்சாகும்.

***

உன்னை நீயே வழி நடத்த வேண்டும். உலகில் குருவும் இல்லை, சீடனும் இல்லை. எல்லாம் ஒன்றே.
உலகத்தில் பற்றுதல் இல்லாமல் சீவிக்க வேண்டும். ஓடும் புளியம் பழமும் போல வாழவேண்டும்.
உலகத்தில் செத்தாரைப் போல வாழ வேண்டும். உழைத்துப் பற்றற்றுச் சீவித்து வேண்டியவர்களுக்கு பொருளுதவி செய்து கொண்டு வாழ்வது நன்று.
அங்குமிங்கும் ஓடாதே. நிலையாக இருந்து உண்மையைக் காண்.

நூல்களைப் படிப்பது சும்மா கிழிக்கும் பனம் கிழங்கிற்கு ஆப்பும் சுத்தியலும் எடுத்த மாதிரித்தான்.
வணங்குவதும் வணங்கப்படுவதும் ஒரு பொருளே என்று அறிந்து கொள்.

***

அது எங்குமுள்ளது. கள்ளனுக்கும் அது உதவி. ஒரு நூதனமும் இல்லை. மேலேயிருப்பதும் நீ தான். கீழே இருப்பதும் நீ தான். ஒருவரே எங்கும் இருக்கின்றார்.
உண்மை ஒன்று உள்ளது. அதைக் கண்டோம் என்றும் கூற முடியாது. காணவில்லை என்றும் கூற முடியாது.
அது நன்மை தீமை இரண்டிற்கும் மேலானது. இரண்டும் அல்லாதது. அனுபவத்தில் அறிய வேண்டும். அதனை அறிவதால் வரும் இன்பத்தை எடுத்துக்கூற முடியாது. அனுபவித்தே அறிய வேண்டும்.
இதற்கு ஆதியும் இல்லை. அந்தமும் இல்லை. இது இல்லாத பொருளும் இல்லை. இது இல்லாத இடமும் இல்லை.
இந்த ஒன்று தான் உலகில் பலவாகத் தோன்றி பல வேலைகளையும் செய்கின்றது. நாம் குறை கூறுவதற்கு ஒன்றுமில்லை.

நாங்கள் இனிச் சும்மா இருப்போம். அதுவே சுகம்.
ஒன்றிலும் முட்டாமல் வாழ வேண்டும். மயக்க உணர்வுகளை உதறி விடு.
உன்னை நீ நம்பு. உன்னில் நீ நிலை.
ஒரு பொல்லாப்பும் இல்லை. வெறுங்கையுடன் உலகிற் தோன்றினாய்.
காலம் முடிந்தவுடன் வெறுங்கையுடனே செல்ல வேண்டும்.
இறைவன் உனக்களித்த விவேகத்தை உன் ஆணவம் கெடுக்க இடம் கொடாதே.

***

உனக்கு ஒன்றும் தேவையில்லை. நீ உன் பாட்டில் செல். சும்மா இரு. உன்னில் நீ ஐயுறாதே. நீ நீயாக இரு. நீ சாட்சி மாத்திரமே.

புகழ்ச்சியையும் இகழ்ச்சியையும் ஒன்றாகப் பார். அதனால் பாதிக்கப் படாதே. நீ சாட்சியே.

நீ அங்குமிங்கும் அலைந்து திரியாதே. உள்முகமாகச் சென்று அங்கேயே அமர்ந்திரு.

உனது மனம், வாக்கு, காயம் மூன்றையும் ஒவ்வொரு நாளும் ஆராய்ந்து கொள்.

***

எல்லாம் கனவு. நான் கனவு காண்கின்றேன். நீ கனவு காண்கின்றாய். இங்கு எல்லோரும் கனவு காண்கின்றார்கள். எல்லாம் கானல்நீர்.

உன்னால் ஆவது ஒன்றுமில்லை. நீ சும்மா உலாவித் திரிந்து உன் வேலையைச் செய். எல்லாம் எப்பவோ முடிந்த காரியங்கள்.

நீ உன்னை எங்கும் காண்பாயானால் அதுவே பரம இரகசியம். உண்மை ஒன்று. அதுவே எல்லாமாய் எங்குமாய் இருக்கின்றது.

***

இழப்பதும் ஒன்றுமில்லை. ஆதாயமாக்கிக் கொள்வதும் ஒன்றுமில்லை. ஒன்றே எல்லாமாய் எங்குமாய் இருக்கும் பொழுது, எவ்வாறு நயம் நட்டத்தைப் பற்றி பேச முடியும்.

வருவதும் போவதும் ஏது? கடந்தகாலம் வருங்காலம் ஏது? உலகம் முழுவதும் ஒரு மனிதனே.

நான் என்னுடைய வேலையைச் செய்கின்றேன். நீ உன்னுடைய வேலையைச் செய். நான் எனக்கு மட்டுமே ஆசான். ஆனால் எல்லோரும் எனது ஆசான்கள்.

நீ உண்மையைக் காணவே விரும்புகின்றாய். உனக்கு வல்லமைகளோ சித்திகளோ தேவையில்லை.

விளைவுகளைப் பற்றிக் கவலைப்படாதே. உன் வேலையை ஒழுங்காகச் செய்.

***

ஆன்ம இலாபமே பொருளெனக் கண்ட அறிஞர் அநித்தியமான இந்த உலக இன்ப துன்பங்களில் மயங்காது தாமரை இலையில் தண்ணீர் போல சகத்துடன் கூடி வாழ்வார்.

ஆன்ம இன்பத்தைப் பெற நினையாதவர் இந்த உலக வாழ்க்கையில் கலங்கித் தியங்கித் திரிவார்கள்.

நன்மை தீமையை வென்று நான் எனது என்ற அகங்காரங்களைக் களைந்த அறிஞர் இறைவன் திருவடி நிழலில் பிறப்பிறப்பற்று நித்திய பேரின்பத்தை அனுபவிப்பர்.

பொறிவழியே போந்து மனம் அலைய அறிஞர் இடம் கொடார்.

ஆத்மாவே தாம் என அறிந்தவர்கள் ஆசை நோய்க்கு இடம் கொடுப்பாரா? அன்று.

***

காரிய சித்தி எய்தும் வரையும் விடாமுயற்சி செய். நீ ஏன் கெட்ட காரியங்களைச் சிந்திக்கின்றாய். அச் சிந்தனைகளை விட்டு முழு மனத்துடன் தெய்வத்தை வணங்கு.

அது அப்படியே உள்ள காரியம் என்பதை சதா நெஞ்சில் பதித்துக் கொண்டு இயல்பாய் உனக்கு வரும் காரியங்களையும் கடமைகளையும் செய்து கொண்டிரு அல்லது அவற்றைச் செய்யாமல் விடு.
எதுவும் சரியே. செய்வதிலும் செய்யாமையிலும் ஒன்றும் தங்கியிருக்கவில்லை.
கருமம் இல்லாமையை விரும்பாதே ஆனால் கருமத்தைப் பற்றாதே. எது உனக்கு இயல்பாய் அமைகின்றதோ அதையே பற்றி நில்.

***

மிஞ்சிய போகத்திலாவது போசனத்திலாவது வைத்திருக்கும் ஆசையை அடியோடு தவிர்க்க வேண்டும். அதுவே விடுதலைக்கு வழி.
யாவும் நமது ஊர். யாவரும் நமது உறவினர். நன்மையும் தீமையும் நாமே தேடிக் கொள்வன. பிறரால் வருவது இல்லை.
பகைத்தலும் விரும்புதலும் இல்லாதவன் சன்னியாசி ஆயினும் இல்லறத்தான் ஆயினும் அவனே பரமபுருடன்.
அவன் சீவன் முத்தனென்று பெரியோர் சொல்வார்கள். தன்னைப் போல மற்றவர்களையும் நேசித்தலே தவம். அதுவே அறம்.

சற்குரு சிவயோகசுவாமி.

